www.padippakam.com


# புதிய சமதர்மம்



உள்ளே

தோழர் ஆ.க. அண்ணாமலை வீரமிகு வெகுஜன போராட்டவாதி 2ம் பக்கம்

தொண்டமான் என்ன செய்யலாம் 3ம் பக்கம்

நைஜீரியா 3ம் பக்கம்


Vol. 1 மலர் 1 இதழ் 2 விலை ரூபாய் 5.00 தை 1996

# மேலோங்குவது சனநாயகமா? சர்வாதிகாரமா?



அனைத்து அதிகாரங்களும் என்னிடமே உள்ளன.

அன்று ஜே.ஆர்

இலங்கையில் இன்று மேலோங்குவது ஜனநாயகமா, அல்லது சர்வதிகாரமா என்பது பிரதான கேள்வியாகும். இன்றைய அரசியலமைப்பினை 1978ல் அமுலுக்கு கொண்டு வந்த போது இவ் அரசியலமைப்பின் கர்த்தாவான அன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர். ஜயவர்த்தனா பின்வருமாறு கருத்து தெரிவித்திருந்தார்: "ஆணை பெண்ணாக்குவதையோ பெண்ணை ஆணாக்குவதையோ தவிர அனைத்து அதிகாரங்களும் என்னிடம் உள்ளன." ஜே.ஆர். ஜயவர்த்தனா தான் கூறியது போன்று செயலிலும் காட்டினார். அரச பாராளுமன்ற உறுப்பினர்களின் இராஜனாமா கடிதங்களை தனது சட்டைப்பையினுள் வைத்துக் கொண்டு, பாராளுமன்றத்தை தான் நினைத்தபடி செயற்படவைத்தார். ஒரு சந்தர்ப்பத்தில் பிரதமர் பிரேமதாசாவுக்கும், ஜனாதிபதி ஜே. ஆருக்கும் இடையே ஒரு முறுகல் நிலை தோன்றிய போது அரசியலமைப்பில் ஜே.ஆர் கூறுவது போன்று அதிகளவு அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என பிரேமதாசா பகிரங்கமாகவே வாதிட்டார். ஆனால் 1988ல் தான் ஜனாதிபதியாக பதவிக்கு வந்த பின்பு ஜே.ஆரை மிஞ்சும் வகையில் பிரேமதாசாவின் சர்வதிகார போக்கு அச்சமூட்டுவதாக அமைந்திருந்தது. உண்மையில் பிரேமதாசா நடத்தியது தனிநபர் ஆட்சி (One Man Show) என்று கூட வர்ணிக்கப்பட்டது. பிரேமதாசாவைத் தொடர்ந்து ஜனாதிபதியாக "லேம்டக்" என்று அழைக்கப்பட்ட டி.பி. விஜயதுங்கா, தனக்கு அதிகளவிலான அதிகாரங்கள் அவசியமில்லையென்று ஆரம்பத்தில் கூறியிருந்தார். ஆனால் பின்பு அதே அதிகாரங்களைப் பிரயோகிப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காகவே தான் ஜனாதிபதி தேர்தலில், போட்டியிடுவதாகவும், 1995 ஜுலையில் அது நிச்சயம் ஒழிக்கப்பட்டு விடும் என்றும் அறுதியிட்டு உறுதி கூறியிருந்தார். அது நடைபெறவில்லை. நடைபெறப் போவதும் இல்லை, என்பது இப்போது தெளிவாக்கப்பட்டுள்ளது. எல்லா அமைச்சர்களும் இராஜிநாமாச் செய்தாலும் கூட தான் நிறைவேற்று ஜனாதிபதியாக 5 வருடம் ஆட்சி செய்யப்போவதாக சந்திரிகா அண்மையில் அடித்துக் கூறியிருந்தார். (One woman show)



எல்லா அமைச்சர்களும் பதவி விலகினாலும் நான் 5 வருடங்கள் பதவியில் இருப்பேன்;

இன்று சந்திரிக்கா

சர்வதிகாரப் போக்குகள் பலப்படுவதையே இது காட்டுகின்றது. வட மத்திய, மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகள் கலைக்கப்பட்ட விதத்தைப் பார்க்கும் போது எவ்வளவு தூரம் அதிகாரத்துஷ்பிரயோகம் இடம் பெறுகின்றது என்பது நன்கு புலனாகின்றது.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தற்போது முன் வைக்கப்பட்ட சட்டவரைவுத் திட்டம் இப்போதுள்ள மாகாண சபையின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையே இல்லாதொழித்து விட விழைகிறது. உண்மையில், பழைய அரசியலமைப்பு முறையில் அடிப்படை மாற்றம் ஏதும் இடம் பெறுவதற்கில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறையிலும் எவ்வித மாற்றமும் இல்லை. மேற்படி மாகாண சபைகளை கலைத்தமையை உற்று நோக்கும் போது. ஜனாதிபதி தன்னிச்சையாக அல்லது தான் தோன்றித்தனமாகச் செயல்படுவதற்கு இந்த அரசியலமைப்பில் எவ்வளவு தூரம் இடமுண்டென்பதைப் புரிந்து கொள்வது மிக எளிதாகும்.

தமிழ் மக்களுக்கெதிராக அல்ல விடுதலைப் புலிகளுக்கெதிராகவே சமாதானத்துக்கான யுத்தம் என்று உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரசாரம் செய்து கொண்டு நடத்தப்படும் யுத்தமானது தமிழ் மக்களை

தொடர்ச்சி.......3ம் பக்கம்

# வடபகுதி அரச ஊழியர் வேற்று நாட்டு பிரசைகளா?

சந்திரிக்கா அரசால் மேற் கொள்ளப்பட்ட சூரியகதிர் இராணுவ நடவடிக்கை காரணமாக வடபகுதியில் 5 லட்சம் மக்கள் நிற்கதியாகியுள்ளனர். இவர்களில் குறிப்பிட்ட சிறு தொகையினர் கொழும்பில் தஞ்சமடைந்தனர். இவர்களுள் அரச ஊழியர்களும் அடங்குவர்.

இங்ஙனம் கொழும்பில் தங்கியிருக்கும் அரச ஊழியர்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இவ் ஊழியர்களுக்கு வேதனம் வழங்கப்படவில்லை. இது தவிர எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படவில்லை. அரசினால் மேற் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் தமது சொத்துக்களை இழந்து நிற்கதியாக இருக்கும் இவ் அரச ஊழியர்கள், கொழும்பு மாநகரில் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக பாதுகாப்பு நடவடிக்கை என்று பொலிசாரும், இராணுவத்தாரும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினால் இவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுவதில்லை. பல அரச ஊழியர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் கூட வைக்கப்படுகின்றனர். தனியார் விடுதிகள் அநேகமானவை மூடப்பட்டிருப்பதால் இவ் ஊழியர்கள் பெருந்தொகைப் பணத்தை செலவு செய்து வீடுகளில் தங்கவேண்டி உள்ளது. பொதுவாக நாட்டில் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற வேளையில் மக்களுக்கும் அரசபணியாளர்களுக்கும் ஏதாவது தற்காலிக நிவாரணம் வழங்கப்படுவது வழமையானதாகும். ஆனால் இன்றைய சந்திரிக்கா அரசு இவற்றை கருத்தில் கொண்டிருப்பதாக தெரியவில்லை. மாறாக, இவ் அரச ஊளியர்களை வேற்று நாட்டு பிரசைகள் போன்றே நடத்துகின்றது.

வடபகுதி அரச ஊழியர்களை வடக்கு – கிழக்கு மாகாண அரசின் ஆளுநர் அலுவலகத்தில் தமது விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு பத்திரிகை அறிவிப்பு அரசினால் வெளியிடப்பட்டது. இவ் அறிவித்தலுக்கிணங்க நூற்றுக் கணக்கான வடபகுதி அரச ஊழியர்கள் தமது விபரங்களை இப்பணியகத்தில்

தொடர்ச்சி:......3ம் பக்கம்

திடீரென உயரும் விலையேற்றத்தால்

# திகைத்து நிற்கும் ஏழை மக்கள்

இன்று நாட்டின் வாழ்க்கை செலவு அதி உச்ச நிலையை அடைந்துள்ளது. மக்களின் நுகர்ச்சிப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளன. மேலும், மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வீட்டு வாடகை மிகப் பெரியளவில் உயர்ந்துள்ளது. போக்குவரத்து கட்டண அதிகரிப்புக்கான இழுபறிநிலை தோன்றியுள்ளது. ஏழை மக்கள் எங்கு திரும்பினாலும் விலையேற்றம் என்ற நிலை தோன்றியுள்ளது.

அம்மையார் ஆட்சிக்கு வந்து ஒருவருடத்துக்கு மேல் ஆகின்றது. உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவைப் பற்றி அரசாங்கம் ஏதும் அக்கறை கொண்டதாக தெரியவில்லை. சிவப்புச் சட்டை தோழர்கள் (அரசில் அங்கம் வகிக்கும்) இதுபற்றி ஒன்றுமே கொக்கரிக்கவில்லை.

மிகவும் அநியாயமாக ஏழை குழந்தைகள் அருந்தும் பால்மாவின் விலை கூட அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி....... 3 ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



## தொண்டமான் என்ன செய்யலாம்

வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தொண்டமான் என்றும் குறிப்பிடத்தக்களவு அக்கறை காட்டி வந்துள்ளார். 3 வருடங்களுக்கு முன் அவர் ஒரு தீர்வுத் திட்டத்தைக் கூட முன்வைத்திருந்தார். யாழ்ப்பாணம் சென்று பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் விரும்பியிருந்தார். ஆனால் அப்போதிருந்த ஜனாதிபதி விஜேதுங்க அதற்கு அனுமதி வழங்க மறுத்து விட்டார். வடக்கு கிழக்கு சுயாட்சிப் பொறுப்பை விடுதலைப் புலிகளிடம் 5 வருடகாலத்துக்கு கையளிக்க வகை செய்யுமாறு இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு வேண்டுகோள் கூட விடுத்திருந்தார்.

யாழ்ப்பாணம் அண்மையில் கைப்பற்றப்பட்டதைப் பற்றி அவர் அதிருப்தியடைந்திருந்தார். அதனை விட வேறு ஒன்றையும் அவர் செய்து கொள்ள முற்படவில்லை. பெருந்தோட்டத்துறையில் தனியார் மயப்படுத்தல் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் மீது முன்வைத்த சில கோரிக்கைகள் வழங்கப்படாவிட்டால் பிரார்த்தனைப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளார். தைப்பொங்கலோடு நடத்தப்படவிருந்த மேற்படி போராட்டம் சித்திரை வருடப்பிறப்புவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

அமைச்சர் தொண்டமான் தனது தலைமையில் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு ஆதரவாக ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதற்கு ஏன் முற்படக் கூடாது? மலையகத்திலும் தென்னிலங்கையிலும் உள்ள தமிழ் மக்களுக்கு இது பற்றி ஒரு கட்டுப்பாடு உண்டு. எனவே அவர்களை அணிதிரட்டி அரசாங்கத்துக்கு நிர்ப்பந்தம் கொடுக்க கூடிய நடவடிக்கையொன்றில் இறங்க வேண்டும்.

இன்று வடக்கு கிழக்கு மக்கள் வரலாறு காணாதவாறு இடம் பெயர்ந்து சொத்து, சுதந்திரங்களை இழந்து உணவின்றி, மருந்தின்றி, உறைவிடமின்றி அல்லற்பட்டுக் கொண்டிருப்பதை எல்லோரும் அறிவர். அது மட்டுமல்லாமல் பல்வேறு பொருளாதாரத் தடைகளையும், வடக்கிற்கும் தெற்கிற்குமிடையில் தமிழ் மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கான தடைகளையும் அரசாங்கம் விதித்துள்ளது. அவர்கள் மீளக்குடியேறுவது பெரிய கேள்விக்குறியாகி விட்டது.

இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு பார்க்கும் போது அமைச்சர் தொண்டமான் வடக்கு, கிழக்கு மக்களுக்கு ஆதரவாக ஒரு நாளேனும் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினால் பெருந்துன்பத்தில் இருக்கும் அம்மக்களுக்கு பெரும் ஆறுதலளிப்பதாக அது அமையும்.

# தோழர் ஆ.க. அண்ணாமலை வீரமிகு வெகுஜன போராட்டவாதி

### ஆரம்பகாலம்

தோழர் ஆ.க. அண்ணாமலை எம்மைவிட்டு பிரித்து எடுக்கப்பட்டு 7 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. ஒரு விஞ்ஞான பட்டதாரி, ஒரு பரிஸ்ட்டர். சிறப்புமிக்க இலக்கியவாதி, பேரறிவு மிக்க ஒரு கலைக்களஞ்சியம் என்று புகழக்கூடிய அனைத்து தகுதிகளும் அவரிடம் குவிந்துகிடந்தன. இவற்றில் ஒன்றையென்றாலும் எண்ணி அவர் என்றும் இறுமாப்படைந்தது இல்லை. மாறாக, தன்னை வெறும் தோழர் அண்ணா என்று அழைப்பதையே பெருமையாக எண்ணி சகலருடனும் பழகியவர்.



தோழர் அண்ணாமலை தனது இளமைக் காலத்திலேயே புரட்சிகர தன்மையை விரும்புகின்றவராக இருந்தார். லங்கா சமசமாஜக் கட்சியின் இளைஞர் பிரிவின் சக்திமிக்க தலைவனாக விளங்கினார். அவர் இளைமைக் காலத்திலேயே லங்கா சமசமாஜக் கட்சியின் கோட்டையாக் சுளிபுரம் விளங்கியது. இப்பகுதியில் பல புரட்சிகர மாற்றங்களை தோழர் அண்ணாமலை தலைமையிலான இளைஞர் படை மேற் கொண்டது. இன்றுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் கல்வியை வியாபாரப் பொருளாக்கி ஏராளமான பணத்தை சம்பாதிக்கின்றன. ஆனால் அன்றைய காலத்தில் சுளிபுரம் பகுதியில் தனியார் கல்வி நிறுவனத்தை நிறுவி மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கப்பட்டது. இப் பகுதியில் நிலவிய தீண்டாமை போக்கிற்கு எதிராக கடும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. இவை போன்று எத்தனையோ நடவடிக்கைகளை தோழர் அண்ணாமலை தலைமையிலான இளைஞர் அணி மேற் கொண்டது.

தனது உயர்கல்வியை நிறைவு செய்யும் பொருட்டு தோழர் அண்ணாமலை முதலில் இந்தியா சென்றார். பின்பு இங்கிலாந்து சென்றார். இவர் இந்தியாவில் கல்விகற்ற காலத்தில் மாணவர் உரிமைக்காக பல போராட்டங்களை நடத்தினார். இதற்காக பல தண்டனைகளையும் இவர் அனுபவிக்க நேரிட்டது. தோழர் அண்ணாமலை இங்கிலாந்தில் கல்விப் பயின்ற காலத்தில் அங்குநிலவிய நிற வேற்றுமைக்கு எதிராக கடுமையாக போராடினார். இதற்காக நிற வெறியர்களின் கொடியதாக்குதல்களுக்கு பலமுறை ஆளாகினார். இரண்டு தடவைக்கு மேல் மருத்துவமனையில் கூட அனுமதிக்கப்பட்டார்.

1960களில் லங்கா சமசமாஜக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததனால் அக்கட்சியில் இருந்த நம்பிக்கையை இழந்தார். இதற்காக தோழர்கள் எட்மன் சமரக்கொடி, பாலாதம்பு போன்றவர்கள் உடனடியாக அன்று லங்காசமசமாஜக் கட்சியை விட்டு வெளியேறியதை அவர் ஏற்கவில்லை. அதற்கு தோழர் அண்ணாமலை கொடுத்த விளக்கம் பின்வருமாறு இருந்தது:

"தோழர்கள் எட்மன் சமரக்கொடி, பாலாதம்பு போன்றோர்கள் லங்காசமசமாஜக் கட்சியில் இருந்து வெளியேறிய போது அவர்களால் கட்சியின் முக்கிய பகுதிகளை (தொழிற் சங்கங்கள், அங்கத்துவர்கள்) தம்முடன் கொண்டு செல்ல முடியாமற் போய்விட்டது. அத்துடன் மேற்படி இரு தோழர்களும் இலங்கை அரசியல் கட்சி வரலாற்றில் நீண்டு நிலைக்கவும் முடியவில்லை. ஆனால் நாம் லங்காசமசமாஜக் கட்சியில் இருந்து நவசமசமாஜக் கட்சியாக வெளியேறிய போது பல தொழிற் சங்கங்களையும் பல போராளிகளையும் எம்முடன் கொண்டு சென்றோம். இன்றும் இலங்கையில் சக்திமிக்க இடதுசாரி கட்சியாகவும் விளங்குகின்றோம். இதன் மூலம் தோழர் அண்ணாமலைக்கு ஆழமான அரசியல் நுட்பத்தை நாம் உணரலாம்."

### மீண்டும் வடபகுதி அரசியலில் அண்ணா

1977ம் ஆண்டு யூ.என்.பி. 5/6 பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்தது. வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி இளைஞர் சக்தியின் உதவியுடன் ஒன்று இரண்டு தொகுதி நீங்கலாக, அமோக வெற்றியுடன் பாராளுமன்றம் சென்றது. யூ.என்.பி.யும் தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஓர் இணக்கப் போக்கிலேயே செயற்பட்டன. இதனால் பெரும் விரக்திக்கும், வேதனைக்கும் தமிழ் இளைஞர்கள் உள்ளானார்கள். மறுபுறத்தில், இடதுசாரிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுக் சேர்ந்ததனால், தமிழ் மக்களின் உரிமைகளை மறுதலித்தனர். அத்துடன் அரசின் துரோகத்தனத்துக்கு துணையும் போயினர். இதனால் வடபகுதியில் இடதுசாரிகள் என்றால் செருப்பால் எறியும் நிலை தோன்றியிருந்தது. (1977ல் யாழ். கோட்டைக்கு அருகில், பீற்றர் கெனமன், N.M. பெரேரா ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்துக்கு செருப்பெறியே விழுந்தது.)

உண்மையில் இடதுசாரிக் கட்சிகள் என்றால், மேதினக் கட்சியென்றே வடபகுதி மக்கள் எண்ணத் தலைப்பட்டனர். ரூசியாவில் மழை பெய்தால் இங்கு குடை பிடிப்பார்கள் என்ற நகைச்சுவை விமர்சனமும் மக்கள் மத்தியில் நிலவியது. ஒருசில இடதுசாரிக் குழுக்களும், அங்கு செயற்பட்டன. அவை தமது பிரதேசத்துக்குள் சிறு நடவடிக்கைகளுடன், மட்டுப்படுத்திக் கொண்டன. எனவே கொழுந்துவிட்டு எரியும், தமிழ் தேசிய இன உரிமை போராட்டத்தை முன்னெடுப்பதற்கு எந்த இடதுசாரி அமைப்பும் முன்வரவில்லை. இதனால், இடதுசரிகளை ஒரு கேலிக்கு உரியவர்களாக தமிழ் மக்கள் கருதினர். இவற்றுள் இலங்கையில் 27க்கு மேற்பட்ட இடதுசாரிப்பிரிவுகள் உண்டாம் என்று மூக்கில் விரல் வைத்தனர்.

மக்களைக் கவர்ந்த பல இடதுசாரி மேடைப் பேச்சாளர்கள் வடபகுதியில் இருந்தனர். தேர்தலையே தமது நோக்காகக் கொண்டு செயற்பட்டவர்களும், தேர்தலே வேண்டாம் என்று கூறி செயற்பட்டவர்களும் இருந்தனர். ஆனால் தமிழ் தேசிய இனப் போராட்டத்தைத் தொழிலாளி வர்க்கப் போராட்டத்துடன் இணைத்து வீதியில் நின்று போராடுவதற்கு யாரும் முன்வரவில்லை. அதற்குரிய துணிவும் அவர்களிடம் இருக்கவில்லை.

எனவே தோழர் அண்ணாமலை வடபகுதி அரசியலில் மீண்டும் காலை வைத்த போது அவருக்கு இரண்டு பெரும் பணிகள் முன் நின்றன. ஒன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் கையாலாகாத்தனத்தால் நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். மறுபுறத்தில் இடது சாரிகளை கேவலமாக எண்ணும் வடபகுதி மக்களின் மனப்போக்கை மாற்ற வேண்டும். இந்த இரண்டு பணிகளுக்காக அவர் இரவு பகலாக உழைத்தார். அதில் வெற்றியும் பெற்றார். தோழர் அண்ணாமலையின் வீட்டுக்கருகே நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அமிர்தலிங்கம் பின்வருமாறு கூறினார்.

"ஐரோப்பிய நாட்டில் கல்வி பயின்ற சில இடதுசாரி நாசகார சக்திகள் இங்குள்ள இளைஞர்களை எம்மிடம் இருந்து பிரிப்பதற்கு தூபம் இடுகிறார்கள். இதை நாம் அனுமதிக்கக் கூடாது" இத்தகைய பேச்சு எதைக் காட்டுகிறது? அண்ணாமலையும் தமிழ் இளைஞர்களும் எந்தளவுக்கு செயற்படுகிறார்கள் என்பதையல்லவா?

உண்மையில் அண்ணாமலை தமிழ் இளைஞர்களினதும், முற்போக்கு சக்திகளினதும். தொழிலாளர்களினதும் ஆதரவை வென்றிருந்தார் என்பதை பின்வரும் நிகழ்வுகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

1980ல் நடைபெற்ற பொதுவேலை நிறுத்தம் அன்றைய யூ.என்.பி. அரசாங்கத்துக்கு பெரும் சவாலாக இருந்தது. இவ் வேலைநிறுத்த போராட்டத்தை வடபகுதியில் வெற்றி பெறச் செய்வதற்கு தோழர் அண்ணாமலை கடுமையாக உழைத்தார். இப்போராட்டத்துக்கு எந்தவித ஆதரவும் வழங்க முதிர்ந்த தமிழ் தலைமைகள் மறுத்துவிட்டன. மாறாக, போராட்டத்தை உடைப்பதற்கு திரைமறைவில் செயற்பட்டன. இப் போராட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்கு தமிழ் இளைஞர் அமைப்புகளும், முற்போக்கு சக்திகளும். தொழிலாளர்களும் மிக கடுமையாக உழைத்தனர். இப்போராட்ட காலத்தில் தோழர் அண்ணாமலை பல தடவைகள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

1980ம் ஆண்டுக்கும் 1989ல் ஆண்டில் தோழர் ஆ.க அண்ணாமலை மறைந்த காலப்பகுதிக்கும் இடையே வடபகுதியில் நடைபெற்ற சகல வெகுஜன போராட்டங்களும் ஒரு தொடர்ச்சித் தன்மையுடையவையாக விளங்கின. இப் போராட்டங்கள் அனைத்தும் இடது சாரிகளின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டன. என்றும் இல்லாத அளவுக்கு தொழிலாளி வர்க்கம், முற்போக்கு சக்திகள், ஒடுக்கப்பட்ட மக்கள் இப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இப் போராட்டங்களின் பின்பே பல வெகுஜன அமைப்புகள் வடபகுதியில் தோன்றின புதிய தொழிற்சங்கங்கள் உருவாகின. பழைய தொழிற்சங்கங்கள் புனரமைக்கப்பட்டன. மரபு ரீதியான இடது சாரிக் கட்சிகள்கூட மூச்சுவிடும் நிலைக்கு வந்தன.

### மொழி வழித் தொழிற்சங்கங்கள்

வடபகுதி வரலாற்றில் மொழிவழித் தொழிற்சங்கங்கள் ஒரு சக்தியாக இருக்கவில்லை. அவை முதலாளித்துவ தமிழ்

தொடர்ச்சி......3ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# நைஜீரியா

ந்தாளரும் போராட்டவாதியுமான கென் சாரோ ாவின் மரணம்.

ன்சாரோ விவா 1995 நவம்பர் 10ம் தேதி கிலப்பட்டார்.

துநலவாய நாடுகளின் அமைப்பு, மனித உரிமைகள் க்கங்கள், நெல்சன் மண்டேலா உள்ளிட்ட ஆபிரிக்க ுகளின் தலைவர்கள், போன்ற பல்வேறுபட்ட பினரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு தியாகி ன்சாரோ விவா அநியாயமான முறையில் ங்கிலப்பட்டார். இவருடன் மேலும் எட்டு பேருக்கு ங்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ன்சாரோ விவா

ன்சாரோ விவா ஒரு செல்வந்தர். அத்துடன், ஒரு ுத்தாளரும் ஆவார். இவர் நாவல்கள், கவிதைகள், டகங்கள், சிறுகதைகள் போன்ற பல்வேறுபட்ட லக்கியத் துறைகளில் பாண்டித்தியம் உடையவர். வர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலக்கியம் மூலம் ாகு உணரப்பட்டவர். நைஜீரியாவின் தென்கிழக்கு தியில் வசிக்கும் ஓசானி பிரிவினரில் ஒருவரே கென் ரோ விவா ஆவார்.

ானி பிரிவினரின் சோகம்

ானி பிரிவினரின் எண்ணிக்கை ஐந்து லட்சத்துக்கும் ற்பட்டதாகும். இப்பகுதியில் "ஆங்கிலோடச்" றுவனத்துக்கு சொந்தமான மிகப் பெரிய எண்ணெய் பனி உண்டு. இவற்றைவிட மேலும் ஐந்து பெரிய ண்ணெய் கம்பனிகள் உண்டு. நைஜீரியாவின் ஏற்றுமதி வருமானத்தின் 90% ஈட்டிக் கொடுக்கும் துறை எண்ணெய் ஏற்றுமதித் துறையாகும். இதனால் நன்மை அடைபவர்கள் ஒரு சில செல்வந்தர்கள் மட்டுமே. வேலையற்றோர் வீதம் 80% ஆக அதிகரித்துள்ளது. கல்வி அறிவு இன்மை 20% ஆக உள்ளது. உலகிற்கே எண்ணெய் ஏற்றுமதி செய்யும் இப் பகுதியில் மின்சாரம் இல்லை. போதிய குடியிருப்பு வசதிகள் இல்லை. சுகாதார வசதிகள் இல்லை.

இங்குள்ள எண்ணெய் கம்பனிகள் இப்பகுதியில் உள்ள இயற்கை வளத்தை அழித்துள்ளன. 1982ம் ஆண்டுக்கும் 1992ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 27 சம்பவங்களினால் 162 லட்சம் கலன் எண்ணெய் வெளியேறியுள்ளது. இவ்வெண்ணெய் வளம்மிக்க நைஜீரிய விளைநிலங்களினுள் சென்றுள்ளது. இங்குள்ள விவசாயிகள் தமது வயல்களில் எப்பகுதியில் வெட்டினாலும் எண்ணெய்க் கசிவே காணப்படுகிறது. இதனால் இப்பகுதி விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமது சொந்த முயற்சியினால் தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்து வந்தது இச் சமூகம். ஆனால் இன்று வெளிநாட்டில் இருந்து உணவை இறக்குமதி செய்வதுடன், தமது பகுதியில் உள்ள இளம் தலைமுறையினரை தொழிலுக்காக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற பரிதாப நிலையில் உள்ளனர்.

இவற்றிக்கு எதிராக பல போராட்டங்கள் ஓகானிய மக்களால் நடத்தப்பட்டது. ஓகானிய மக்கள் உயிர் வாழ்வதற்கான அமைப்பு (MOSOP) இப் போராட்டத்தை நடத்தியது. ஆரம்பத்தில் இப் போராட்டம் அமைதியாகவே நடத்தப்பட்டது. இவர்களின் முக்கிய கோரிக்கைகளாவன இப்பகுதியில் இருக்கும் எண்ணெய் கம்பனிகளால் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு நஷ்டஈடு, இப்பிராந்தியத்திற்கு சுயாதீன உரிமை, மத்திய அரசால் நியாயமான முறையில் நிதி வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இப் போராட்டத்துக்கு எதிராக வழமை போன்று நைஜீரிய இராணுவ நிர்வாகமும், பல்வேறுபட்ட கெடுபிடிகளை கட்டவிழ்த்து விட்டது. விசேட நடமாடும் பொலிஸ்படை உருவாக்கப்பட்டது. இப்பகுதி கிராமங்களும், வீடுகளும், தீக்கிரையாக்கப்பட்டன. மக்களை இரக்கமில்லாத முறையில் சுட்டுத்தள்ளினர். ஆயிரக்கணக்கானோர் சிறை வைக்கப்பட்டனர். பலர் தலைமறைவாகினர். இப் போராட்டத்தில் 2,000 மேற்பட்ட ஓகானிய மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இவற்றுக்கு எதிராக இளைய தலைமுறையினர், மிகக் கடுமையாக பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். நைஜீரிய இராணுவ நிர்வாகத்துக்குச் சார்பான பல உள்ளூர் பிரதானிகளைக் கொன்றனர். இக் கொலைகள் தொடர்பாகவே கென் சாரோவிவாவும் ஏனைய எண்மரும் கைது செய்யப்பட்டனர். உண்மையில் நைஜீரிய இராணுவ நிர்வாகத்தின் நோக்கம் என்னவென்றால் MOSOP இயக்கத்தை இதன் மூலம் இல்லாமல் செய்வதுடன், அதன் தலைவர்களை அழித்து விடுவதும் ஆகும். இதன் மொத்த விளைவே கென் சாரோ விவாவின் படுகொலையாகும்.

நைஜீரிய இராணுவ நிர்வாகம் கொன்சாரோ விவாவையும் ஏனைய எண்மரையும் தூக்கிலிட்டதன் மூலம் ஓகானிய மக்களின் போராட்டத்தை நசுக்கிவிட்டதாக எண்ணுகிறது. ஆனால் நடந்தது என்னவென்றால் ஓகானிய மக்களின் போராட்டம் உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதன் விளைவே இன்று உலகின் பலபாகங்களிலும் நைஜீரியாவுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெறுகின்றன.

...... 1 ம் பக்கம் தொடர்ச்சி

## மலோங்குவது னநாயகமா? சர்வாதிகாரமா?

மலும் கொன்றொழிப்பதற்கான தந்திரம் என்றே தமிழ் க்கள் கருதுகின்றனர். மறுபுறத்தில், அரசாங்கத்தின் த்தகைய மக்கள் விரோத போக்குகளை றியடிப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வலைத்திட்டம் ஏதும் இல்லை. விடுதலைப் புலிகள் வகுஜன சக்தியை மறந்து செயற்படுவது வலையளிப்பதாக உள்ளது. உதாரணமாக யட்நாமை எடுத்துப் பார்க்கின்றபோது அங்கு டைபெற்றது முழு அளவிலான மக்கள் த்தமேயொழிய, வெறும் ஆயுதப் போராட்டமல்ல. மெரிக்க ஏகாதிபத்தியம் அங்கே தழுவிக் கொண்ட தால்விக்கு அது ஒரு பிரதான காரணமாகும். ாதுமிரண்டால் காடு கொள்ளாது என்பது முது மாழியாகும். அதே வேளை தமிழ் மக்களின் டுதலைக்காக போராடுவதாகக் கூறிக்கொண்டு அரச டைகளுடன் தோளோடு தோள் நின்று போர் முனையில் செயற்படும் தமிழ் அமைப்புக்களுக்கு தமிழ் மக்கள் எதிர் காலத்தில் உரிய தீர்ப்பை வழங்குவார்கள். இப்போது ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பும் கிழக்கு மாகாணத்தில் அரச படைகளுடன் இணைந்து செயற்படுவதாக அறியப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அண்மைக்காலம் முதல் அரசாங்கத்தை எதிர்த்துச் செயற்படுவது போல் தெரிகிறது. இது ஒரு சிறப்பு வாய்ந்த நிலைப்பாடாகும். உண்மையில் அரசாங்கத்தை பலமான முறையில் எதிர்த்தாலேயே விடிவு பிறக்க வழியேற்படும். தமிழ் மக்கள் இன்று மிகப் பெரிய அளவில் இடம்பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளாகியுள்ளனர். அவர்களை அவர்களது சொந்த இடத்தில் குடியேற வைப்பதே இன்றுள்ள முதற் கடமையாகும். இதற்காக பரந்தளவிலான தமிழர் இணைப்புக்குழு அமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது அவசியமாகும். இத்கு நவசம சமாஜக் கட்சி அதிகளவு பங்களிப்புச் செய்யத் தயாராக உள்ளது. இதை அக்கட்சியின் பொதுச் செயலாளர் எமது நிருபரிடம் தெரிவித்துள்ளார். ■

...... 2 ம் பக்கம் தொடர்ச்சி

## தோழர் ஆ.க. அண்ணாமலை ......

கட்சிகளின், அரசியல் போக்கில் நிலை தடுமாறி தத்தளித்தன. தமிழ் மக்கள் யூ.என்.பி. அரசால் அழித்தொழிக்கப்பட்ட காலப்பகுதியில், செயற்பட வேண்டிய இத் தொழிற்சங்கங்கள் செயலிழந்து காணப்பட்டன. இத்தகைய தொழிற்சங்கங்களை கூட செயற்பட வைத்து போராட்டங்களில் கலந்து கொள்ள வைப்பதற்காக தோழர் அண்ணாமலை பெரும் பங்காற்றினார்.

1983ல் தோழர் அண்ணாமலை

1983ல் நடைபெற்ற இனக் கலவரத்துக்கு, இடதுசாரிகளே காரணம் எனக் கூறி அக்கட்சிகளின் தலைவர்களை கைது செய்ய யூ.என்.பி. அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. இத்தகைய இடதுசாரித் தலைவர்களுள் ஒரே ஒரு தமிழரான தோழர் ஆ.க. அண்ணாமலையின் பெயரும் இடம்பெற்று இருந்தது. இக்காலத்தில் தோழர் அண்ணாமலை இந்தியாவில் தலைமறைவாக இருந்தார். இவர் இந்தியாவில் தலைமறைவாக இருந்த காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். பல முற்போக்கு சிந்தனை கொண்ட இந்தியத் தலைவர்களை சந்தித்து, இலங்கையில் தமிழ் மக்கள் படும் துன்பங்களை எடுத்துக் கூறினார். இந்திய இடதுசாரி கட்சிகளின் தலைவர்களை சந்தித்து இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக பல போராட்டங்களை நடத்தும்படி வேண்டுகோள் விடுத்தார். துக்ளக் ஆசிரியர் சோ போன்றவர்களுடன் கூட இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான சர்ச்சையில் ஈடுபட்டார்.

தோழர் ஆ.க. அண்ணாமலை வடபகுதி அரசியல் வரலாற்றில், ஒரு புயலாகவே செயற்பட்டார். தான் சார்ந்த கட்சிக்காகவும், தமிழ் மக்களுக்காகவும், அவர் அயராது உழைத்தார். தனது கருத்தை நிமிர்ந்து நின்று சொல்லக் கூடிய ஆற்றல்மிக்க தலைவராக அரசியலில் திகழ்ந்தார். தான் எந்த இலட்சியத்துக்காக பாடுபட்டாரோ அந்த இலட்சியத்துக்காக இறுதி வரை பாடுபட்டு தனது இன்னுயிரையும் கொடுத்தார்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்பது வள்ளுவர் வாக்காகும். தோழர் அண்ணாமலை எம்மை விட்டு பிரிந்து ஏழு ஆண்டுகள் சென்றாலும் கூட அவரது, பசுமையான நினைவுகள் இன்றும் எமது உள்ளத்தில் இளமையுடன் வலம் வருகின்றன. அதுவே அவரது தகுதியை எம் மத்தியில் நிலைநிறுத்துகின்றது.

வ. திருநாவுக்கரசு

...... 1 ம் பக்கம் தொடர்ச்சி

## டபகுதி அரச ஊழியர் வேற்று .....

திவு செய்தனர். இன்று வரை இவ் விபரங்கள் ம்பந்தமாக எந்த வித நடவடிக்கையையும் வடக்கு - ிழக்கு மாகாண நிர்வாகம் மேற்கொள்ளவில்லை. த்தனையோ பிரச்சினைக்கு மத்தியில் ஆளுநர் ணிமனைக்கு சென்று தமது விடயத்தில் ஏதாவது முன்னேற்றம் உண்டா என இவ் ஊழியர்கள் வினவுகின்ற போது, "இல்லை" என்றே மறுமொழி வழங்கப்படுகின்றது.

வடபகுதி மக்களுக்கு ஒளியை காட்டப்போகின்றோம் என தொடர்பு சாதனங்கள் மூலம் தினமும் தீவிர பிரசாரத்தில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. மறுபுறத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்காது அவர்களைப் பட்டினி போட்டு வதைக்கின்றது.

கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் சொற்ப அளவு அரச ஊழியர்களுக்கு அவர்களது வேதனத்தையே வழங்க பின்நிற்கும் இந்த தொழிலாளர் விரோத அரசு தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கும் என்பது வெறும் பகற்கனவாகும். ■

...... 1 ம் பக்கம் தொடர்ச்சி

## திடீரென உயரும் விலையேற்றத்தால் .......

பிளேன்ரீ, ரீ, வெள்ளை இடியப்பம், வடை, கீரைப்பிடி, சூடைமீன், போன்ற ஏழைகளின் அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளும் உயர்ந்துள்ளன.

பிரதான எதிர்கட்சி வாய்திறந்து கருத்து தெரிவிப்பதையே நிறுத்திவிட்டது. ஏனென்றால் கடந்த 17 வருடங்களாக இதையே தான் அதுவும் செய்தது.

மரபு ரீதியான இடதுசாரிக் கட்சிகள் கூட கடமைக்குத் தானும் விலையேற்றம் பற்றி கருத்து தெரிவிக்கவில்லை. தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அமைப்புகளும் (LTTE நீங்கலாக) அரசாங்கத்துக்கு ஆதரவாகவே செயற்படுகின்றன.

ஆனால் மக்கள் தமது வயிற்றுப் பசியை மறைத்துக் கொண்டு பல காலம் பொறுத்து இருக்கமாட்டார்கள். பொங்கி எழத்தான் போகின்றார்கள். அப்போது எங்களது கருத்துக்களையும் புதிய போக்கையும் நிச்சயம் ஆதரிப்பார்கள். ■

படிப்பகம்

www.padippakam.com



# தேசியவாத அரசியலும் இடதுசாரி இயக்கமும்

— கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன



தேசியவாத அரசியல் மீது இடதுசாரி இயக்கத்தின் போக்கு முதலாவது உலக யுத்தத்தின் போது ஐரோப்பாவில் பரவலாக ஆராயப்பட்டது. லெனின் இந்த விடயத்தை றோசா லக்சம்பேக், லியொன் ட்ரோட்ஸ்கி, பின்பு காள் கவுட்ஸ்கி ஆகியோருடன் ஆக்ரோசமாக விவாதித்தார். தேசியவாத அரசியல் மீது இடதுசாரிகளின் போக்கானது குறிப்பிட்டதொரு நாட்டின் வரலாற்று ரீதியான அபிவிருத்திக் கட்டத்தையும், அந்த நாட்டின் தேசிய இனங்கள் பிரச்சினை மீதான குறிப்பான அம்சங்களையும் பொறுத்ததாயிருக்கு மென்பது லெனின் வலியுறுத்திய நிலைப்பாடாகும்.

ஏகாதிபத்திய யுகத்திலும் மற்றும் ஏகபோக முதலாளித் துவத்தின் நெருக்கடி நிலையிலும் ஏகாதிபத்தியத்துக் கெதிராகவும் சோசலிச புரட்சியை முன்னேற்றுவதற்காகவும், இடதுசாரி இயக்கமானது தேசிய விடுதலை இயக்கங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று லெனின் கூறினார். அடக்குமுறைக்கு ஆளாக்கப்படும் இனமொன்றின் முதலாளித்துவ தேசியவாதத்தில் அடக்கு முறைக்கு எதிரான பொதுவான ஜனநாயக உள்ளடக்கம் இருக்கச் செய்கிறது. இத்தகைய ஜனநாயக உள்ளடக்கமானது சோசலிச வாதிகளினால் நிபந்தனையின்றி ஆதரிக்கப்பட வேண்டும். ஆனால் தேசியவாதமானது ஒரு பிரத்தியேக தன்மையை தன்னகத்தே கொண்டிருக்குமாயின் இடதுசாரிகள் அதற்கு ஒத்தாசை வழங்க முடியாது. தேசியவாதத்துக்கு நியாயாதிக்கம் வழங்கும் போதெல்லாம் எக்காரணம் கொண்டும் முதலாளித்துவ தத்துவங்களினால் தொழிலாளி வர்க்கச் சிந்தனை மழுங்கடிக்கப்பட முடியாது என்று லெனின் மேலும் விளக்கினார். ஐரோப்பாவில் பாசிசம் தலைதூக்கிய காலத்தில் தேசியவாத அரசியல் மீதான விவாதம் ஒரு புதிய திருப்பத்தை எடுத்தது. தேசியவாதம் மீது ட்ரொட்ஸ்கி ஒரு தெளிவான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கவில்லையென லெனின் சாடியிருந்தார். ஆனால் பாசிசத்தையும், இடதுசாரி இயக்கத்தில் அது ஏற்படுத்திய தாக்கத்தையும் புரியவைப்பதில் ட்ரொட்ஸ்கி அதி முக்கியமான பங்களிப்பைச் செய்துள்ளார். தேசியவாதத்தின் ஊடகங்களாகிய குட்டி முதலாளித்துவ வெகுஜன இயக்கங்கள் அல்லது ஜனரஞ்சகமான மத்தியவகுப்பு இயக்கங்கள் மேற்கு ஐரோப்பாவில் முதலாளித்துவம் வளர்ச்சி பெற்ற போது 3 கட்டங்களின் ஊடாகச் சென்றன.

முதலாளித்துவ புரட்சிகள் வெடித்த போதெல்லாம் குட்டி முதலாளித்துவ மக்கள் தேசிய ஒருமைப்பாட்டுக்கான புரட்சிகர சக்தியாக செயற்பட்டனர். ஒரு தேசிய அரசை ஏற்படுத்தும் நோக்கத்தையே அத்தகைய இயக்கங்கள் கொண்டிருந்தன.

அதன் பின்பு பாராளுமன்ற ஜனநாயகம் விஷ்தரித்து உறுதிபெற்றாகிவிட்டது. முதலாளித்துவ தாராளக் கொள்கையையும் சீர்திருத்த வாதத்தையும் தொழிலாளி வர்க்க இயக்கங்களே உள்வாங்கின. ஒவ்வொரு தேசிய அரசினுள்ளேயும் இடம்பெற்ற கலாச்சார வளர்ச்சியினால் தொழிலாளர்கள் ஈர்க்கப்பட்டார்கள். எனினும் மத்திய வகுப்பினரே சீர்திருத்த ஜனநாயகத்தின் முதுகெலும்பாக விளங்கினர்.

இறுதியில் முதலாளித்துவம் ஆழ்ந்த நெருக்கடிக் குள்ளானதும், (இரண்டு உலக யுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்தது போல) மத்திய வகுப்பினர் பாராளுமன்ற ஜனநாயகத்தை விட்டுவிலகியதுடன் தீவிரமடைந்த வர்களாகவும் காணப்பட்டனர். எவ்வாறாயினும், சமுதாயத்தை வழி நடத்துவதற்கு புரட்சிகர இடதுசாரி இயக்கமொன்று இல்லாவிட்டால் இவர்கள் திக்கற்ற நிலைக்குத் தள்ளப்படுவர்.

## மூன்றாவது உலகத்தில் தேசியவாதம்

எவ்வாறாயினும், இலங்கை போன்றதொரு 3வது உலக நாட்டில் மேற்படியான அதே வளர்ச்சிக் கட்டங்கள் இருக்கவில்லை. ஏனென்றால் முதலாளித்துவமானது அந்நிய ஆதிக்கத்தினால் புகுத்தப்பட்ட ஒன்றாகும். இது ஒரு சிக்கல் நிறைந்த முரண்பாட்டு நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளது. முதலாவதாக முதலாளித்துவத்தின் கீழ் சந்தைப் பொருளாதார சக்திகள் வளர்ச்சி பெறுகையில் தேசிய எழுச்சி ஏற்படுகிறது. அதே நேரத்தில் இத்தகைய சக்திகள் ஏகாதிபத்திய அதிகாரத்துடன் முட்டிமோதும் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. அதாவது தேசிய இயக்கங்கள் அவற்றை உருவாக்கிய அதே சக்தியுடனேயே மோதிக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே 3வது உலகிலுள்ள முதலாளித்துவ வர்க்கமானது பரிதாபமான நிலையில் உள்ளது. அது தனது எஜமானை எதிர்த்து சுயாதீனமான தேசிய அரசை உருவாக்க விழைகிறது. அதாவது, தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் கீழ் தேசிய ஜனநாயகப் புரட்சி ஒரு போதும் பூர்த்தியடையப் போவதில்லை. ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை ஏற்படப்போவதுமல்லாமல் ஏகாதிபத்தியத்தினால் ஷ்தாபிக்கப்பட்ட தேசிய எல்லைகளுக்குள் எத்தனையோ தேசிய இனங்கள் சிறை வைக்கப்பட்ட நிலையில் உள்ளன.

இலங்கையும் இந்தியாவும் இத்தகைய அபிவிருத்தி குன்றிய நிலைக்கு இரு சிறந்த உதாரணங்களாகும். இலங்கையில் ஆங்கிலம் பேசும் மேற்கத்தியமாகியுள்ள உயர்மட்டத்தினர் ஏகாதிபத்தியத்தின் முகவர்களாகச் செயற்படுகின்றனர். இந்த உயர்மட்டத்தினர் சிங்களம் மற்றும் தமிழ் பேசும் இனத்தவர்கள் மீது ஆதிக்கம் செய்கின்றனர். உண்மையில் இங்கு 3 இனங்கள் உள்ளன எனலாம். இரு இனங்களையும் அடக்கும் 3வது இனம் ஆங்கிலம் பேசும் "இனமாகும்" அடக்கப்படும் இரு இனங்களும் விடுதலைக்கும் விமோசனத்துக்குமாகப் போராடிக் கொண்டிருக்கின்றன. எவ்வாறாயினும் இந்த ஆங்கிலம் பேசும் உயர்வர்க்கமானது சிங்களவர்களையும் தமிழர்களையும் ஒருவருக்கொருவர் எதிரிகளாக்கி இரு இனங்களின் தேசியவாத இயக்கங்களையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன.

1956 ல் பண்டாரநாயக்கா தலைமையில் பதவிக்கு வந்த ஸ்ரீ.ல.சு. கட்சி ஒரு தேசிய வாத கட்சியாகும். அக்கட்சியானது தமிழ் தேசியவாத கட்சியாகிய சமஷ்டிக்கட்சியின் மற்றும் இடதுசாரி இயக்கத்தின் ஆதரவையும் பெற்றுக் கொண்டது. ஆட்சியைக் கைப்பற்றியதும் அவ் அரசாங்கம் ஏகாதிபத்தியத்துடன் சமரசப்போக்கினைக் கடைப்பிடித்து, சிங்கள பேரினவாதத்திற்கு அடிபணிந்து 1958 ல் முதலாவது இனக்கலவரத்தை ஏற்படுத்தியது. அன்று இடதுசாரி இயக்கம் மொழிகளுக்கு சம அந்தஷ்து எந்த அடிப்படையில் இனங்களின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டது.

எவ்வாறாயினும், தமிழர்கள் மொழிச் சமத்துவத்துக்கப்பால் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரிவுகளுக்கு பிராந்திய சுயாட்சி அதிகாரம் கோரினர். இடதுசாரி இயக்கம் இந்த நியாயமான கோரிக்கைக்கு ஆதரவ வழங்கத்தவறியது மட்டுமல்லாமல் பின்பு 1964 லும் 1970 லும் பண்டாரநாயக்க அரசாங்கங்களில் சிறிய பங்காளர்களாகவும் பிரவேசித்தனர்.

1977ல் சிறிமா பண்டாரநாயக்க அரசாங்கம் வீழ்ந்தது. ஆனால் ஆங்கிலம் பேசும் உயர்வர்க்கத்தினரின் ஆட்சி தொடர்ந்தது. அதே நேரத்தில் சிங்கள, தமிழ் மக்கள் மத்தியிலான விரிசல் வெளிப்படையாக உருவெடுத்தது. இடதுசாரி இயக்கம் செல்வாக்கிழந்து காணப்பட்டதுடன் சிங்கள / தமிழ் இளைஞர்கள் பழைய இடதுசாரிகளில் முற்றாக நம்பிக்கையிழந்தனர். இதன்வாயிலாக இளைஞர் இயக்கங்கள் சிங்கள / தமிழ் பகுதிகளில் தோற்றம் பெற்றமைக்கான சூழ்நிலைகளை புரிந்து கொள்ளலாம்.

## இளைஞர் ஆயுதப் போராட்டம்

தென் இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுனையின் தலைமையில் 1971 லும் 1989 லும் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதே போன்றே 1983 ம் ஆண்டில் இருந்து தமிழர் அமைப்பும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது. இத்தகைய அமைப்புக்கள் இரண்டும் பிரதான காரணிகளை முன்வைத்தே போராட்டத்தில் ஈடுபட்டன. அவையாவன அபிவிருத்தியடையாமல் இருக்கும் கிராமிய சமுதாயம், தேசிய விடுதலை என்பன ஆகும். ஜனதா விமுக்தி பெரமுனையின் ஆயுதப் போராட்டம் சமூக காரணிகளை மையமாக வைத்தே இடம் பெற்றது. தமிழ் ஈழ விடுதலை புலிகளின் ஆயுதப் போராட்டமும் தமிழ் மக்களில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவே அமைந்தது. எனவே ஜனதா விமுக்தி பெரமுனையும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும், அடக்கு முறைக்கு எதிராக போராடிய தேசிய விடுதலை இயக்கமாக கருதலாம். மறுபுறத்தில் ஜனதா விமுக்தி பெரமுனையும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் சமூகத்தின் ஒற்றுமை எனக் கூறிக் கொண்டு இடதுசாரிகளையும், தொழிற்சங்க அமைப்புகளையும் தாக்கியமையானது அவர்களது பிற்போக்கான பாசிசத் தன்மை வாய்ந்த போக்குகளை வெளிப்படுத்துகின்றது.

நவசமசமாஜக் கட்சி சமூகங்களின் ஐக்கியத்துக்காக தொடர்ந்து போராடி வருகின்றது. இந்த ஐக்கியமானது சமத்துவம், சுயாதிபத்தியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படையில் அமைய வேண்டும். எமது நடவடிக்கைகள் இரு சமூகங்களுக்கிடையேயும் உள்ள தேசியவாதிகள் மத்திய செல்வாக்கு பெற்றுள்ளது.

தற்போது சிறுபான்மை மக்களுக்கு சுயாட்சி அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினுள்ளும், தமிழ் அமைப்புக்கள் மத்தியில் பெருமளவு செல்வாக்கு பெற்றுள்ளது.

தற்போது தேசியவாத கட்சிகள் இணக்கத்துக்கான பேச்சுவார்த்தைகளுக்கு வழி ஏற்படுத்தியுள்ளன. அதே வேளை புதிய குழுக்கள் எல்லா சமூகங்களுக்கிடையேயும் தோன்றியுள்ளன. இவை பௌத்த, இந்து மற்றும் இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்களாகும். இத்தகைய நிலை உலகம் முழுவதும் தோற்றம் பெற்று வருகின்றது. மரபுரீதியான தேசிய வாதம் போல் அன்றி அடிப்படைவாதமானது மதரீதியின் அல்லது ஒழுக்கரீதியானதே அன்றி அது மொழி ரீதியான அடிப்படையை கொள்ளவில்லை.

பொருளாதார ரீதியான தேசியவாதம் பொருள் உற்பத்தியில் முழுமையான வெற்றியைப் பெற வேண்டும். முதலாளித்துவம் உள்நாட்டு சந்தையை கைப்பற்ற வேண்டும். அரசியல் ரீதியாக நாட்டின் பகுதிகள் இணைக்கப்பட வேண்டும். ஒரே மொழி பேசப்பட வேண்டும். மொழி வளர்ச்சிக்கும், இலக்கிய உறுதிப்பாட்டிற்கும் தடையாக உள்ள இலக்கியங்கள் யாவும் நீக்கப்பட வேண்டும். மறுபுறத்தில், அடிப்படை வாத கொள்கையாவும் வெவ்வேறு பொருளாதார காரணிகளால் ஏற்படுகின்றன. இன்று மூன்றாம் உலக நாடுகளில் சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளால் அனைவருமே சீரழிந்துள்ளனர். விதிவிலக்காக ஒருசில முகவர்களும் தரகர்களும் நன்மையடைந்துள்ளனர். முதலாழித்துவ ஏகபோகம் எவரும் நன்மையடைய முடியாத ஒரு சூழலை ஏற்படுத்தியுள்ளது. அதனது சந்தை பொருளாதார முறைக்குள் இருப்பவர்கள் மிகவும் சுரண்டப்படுவதுடன் ஒரு அந்நியப் படுத்தப்பட்ட நிலையில் வாழ்கின்றனர்.

இந்த சந்தை பொருளாதார முறைக்கு வெளியே வீசப்பட்ட கோடிக்கணக்கான மக்கள் மிகுந்த ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சுற்றாடல்வழங்கல், ஆரோக்கியமான சூழ்நிலை, நாகரீகமான வாழ்க்கை இவை யாவும் மறுக்கப்படுகின்றன. கொள்ளையடிக்கும் சக்தியான சர்வதேச முதலாளித்துவம் சுரண்டப்படும் மக்களை மனிதப் புளுக்களாகவே கருதுகின்றது. இத்தகைய மக்களை இன்று அமெரிக்க சேரிகளிலும், ஷ்டாலிச ரூசிய வீதிகளிலும், நவ காலனித்துவ நாடுகளின் கிராமங்களிலும் காணலாம். இந்த மக்களுக்கு முதலாளித்துவ அல்லது மத்தியதர வகுப்பு அபிலாசைகள் இல்லை. ஆனால் துர்அதிஷ்டவசமாக தொழிலாளர் வர்க்க தலைமைத்துவ நெருக்கடியானது ஒரு இடைவெளியை தோற்றுவித்துள்ளது.

சோவியத் ரூசியாவின் வீழ்ச்சிக்கு பின்பு சோசலிசம் மக்கள் சக்தியால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் மக்கள் வாத அரசியல் வாதிகள். ஷ்டலின் வாதத்தை உண்மையான சோசலிசமாக அடையாளம் காட்டியுள்ளனர். இத்தகைய பிழையான முடிவினாலேயே சோசலிசம் தோல்வியடைந்தது.

## அடிப்படை வாதம்

இந்த சூழ்நிலையில் சூழல் மற்றும், சமய ரீதியா அடிப்படைவாதம் ஒரு புதிய போக்காக எழுந்துள்ளது. மேற்கத்திய கைத்தொழில் முறை ஒரு பரிகாரமாக அமைய முடியாததால், மேற்குலகம் அதே போன்று கைத்தொழில், மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றிற்கு எதிரான கருத்துக்கள் செல்வாக்கு பெற்றுள்ளன. பெரும்பான்மை மக்களுக்கு பாதகமான முறையில் முதலாளித்துவ வாதிகள். அதிகளவு நுகர்ச்சி பழக்கத்தை மேற்கொண்டுள்ள ஒரு சிறுபான்மையினர் என்பது உண்மைதான். இது எதிர்காலச் சந்ததியினருக்கும் கூட பொருந்தலாம். முதலாளித்து வமானது சுரண்டல், மற்றும் மிதம்மிஞ்சிய சுரண்டல் ஆகிய சட்டங்களை தாண்டி, பெரும்பான்மை மக்களின் வாழ்வாதாரங்களை பகற் கொள்ளையடிக்குமளவுக்கு முதலாளித்துவம் சென்றுவிட்டது.

இன்று அழிவுகள் என்னும் நரகம் உலகத்தில் ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ரூசியாவிலும் ஏனைய கம்யூனிஷ்ட்ட நாடுகள் என்று அழைக்கப்பட்ட இந்த ஷ்டலின் முறை முதலாளித்துவத்தினை விமர்சன ரீதியாக ஏற்றுக் கொண்டது.

மிகுதி அடுத்த இதழில்

## தியாக மலர்

*ஆசைப்பிள்ளை கந்தசாமி அண்ணாமலை*
*ஆரம்பம் கண்ட ஊர் பண்ணாகம்.*
*ஆரம்ப வயதில் தாய் தந்தை இல்லை*
*இருந்தும் விஞ்ஞான சட்ட அறிவு மலை.*

*ஏழை எளியோர்க்கு பெருவாழ்வு நாடி*
*சுரண்டல் பேர்வழிக்கு எதிர்ப்பு நிலை காட்டி*

*சாதி சமயம் இல்லையென வாதாடி*
*அரசியல் வாழ்வில் நின்றார் இடதுசால் நாடி*
*கல்வி மானாய் தலை நிமிர்ந்து நின்றார்.*

*சாதிமானாய் இருந்தும் தாழ்ந்தோருடன் உண்டார்.*
*சட்டதரணியாய் இருந்தும் பொய் பேச மறுத்தார்.*
*நேர்மைக்காக ஈற்றில் உயிரும் துறந்தார்.*

அந்தோனிப் பிள்ளை

இச் செய்தித்தாள் கொழும்பு 2, கியு ரோட் 143/3ஆம் இலக்கத்தில் வதியும் திருநாவுக்கரசு என்பவரால், வெலோன் பெசேஸ் ஒஸ்வின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

புதிய
# சமதர்மம்

உள்ளே

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமும,
தமிழர் விடுதலைக் கூட்டணியின் தளர்ந்த நிலையும் 2ம் பக்கம்

போலந்தில் நடப்பது என்ன? 3ம் பக்கம்

Vol. 1 மலர் 1 இதழ் 3 விலை ரூபாய் 5.00 மாசி 1996

# பெருந்தோட்டத்துறை பேராபத்தில்
# தொண்டமான் எங்கே? சந்திரசேகரன் எங்கே?



இன்று பெருந் தோட்டத் துறை முன்னொரு போதுமில்லாதளவு பேராபத்தான நிலையில் உள்ளது. இது தொழிலாளர்களைப் பொறுத்தவரை ஒரு படுபயங்கரமான நிலைமை என்பதை யாரும் விளக்கத் தேவையில்லை. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அரசாங்கம் தனியார் மயப்படுத்தலை துரிதகதியில் முன்னெடுத்துச் செல்கிறது. இது ஒரு முற்றுமுழுதான மக்கள் விரோத நடவடிக்கையென்பதை சொல்லத்தேவையில்லை. இத்தகைய செயற்பாட்டில் அரசாங்கம் இறங்கி யிருப்பதற்கு உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்ப்பந்தங்கள்தான் காரணம் என்பது தெரிந்ததே. நாட்டின் தலைவிதியை ஏகாதிபத்திய நிதிநிறுவனங்கள் நிர்ணயிக்கும் போது நாட்டின் இறைமையைப் பற்றி அலட்டிக் கொள்ளும் "தேசபக்தர்கள்" பேரினவாதிகள் வாய்மூடிக் கொண்டிருப்பது மிகவும் அவமானதாகும் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க வேண்டும்.

மேற்கண்டவாறு நவசமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன எமக்களித்த பேட்டியில் கூறினார். அவர் தமது பேட்டியில் பின்வருமாறு தொடர்ந்து கூறினார்.

இ.தொ.கா தலைவர் தொண்டமான் எங்கே சென்று விட்டார்? தோட்டத் தொழிலாளர்கள் துரித கதியில் ஓரங்கட்டப்படுவது அவரது கண்ணில் படவில்லையா? தொழிலாளரின் முக்கிய கோரிக்கைகளை பொ.ஐ.மு. அரசாங்கம் வழங்காவிட்டால் தொழிலாளர்கள் ஆராதனைப்"போராட்டத்தில்" இறக்கப்படுவார்கள் என முழங்கினார். தைப்பொங்கல் வந்து போய்விட்டது. "போராட்டம்" சித்திரை வருடப்பிறப்புக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று கூறினார். சித்திரை அண்மிக்கின்றது. ஒரு சத்தமும் இல்லை. இது தொழிலாளர்களை மிகுந்த விரக்தி நிலைக்குத் தள்ளியது மட்டுமல்லாமல் கடுமையான ஆத்திரமடையவும் செய்து விட்டதில் ஆச்சரியமேதுமில்லை. எத்தனை காலம் தான் தொழிலாளர்களை ஏமாற்றுவது? அவர்கள் சார்பில் பக்கம் பக்கமாக அறிக்கைகளை விட்டுக் கொண்டிருந்தால் போதுமா? அரசாங்கங்கள் பாராமுகமாயிருந்தால் ஏன் தொடர்ந்து அவ் அரசாங்கங்களில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்?

**சந்திரசேகரன் என்ன செய்கிறார்**

தொண்டமான் எப்போதும் எந்த அரசாங்கத்தையாவது ஆதரித்து சில நன்மைகளைப் பெறுவதற்கு "பாடுபடுவது" தான் தனது நிலைப்பாடு என்று கூறிவந்துள்ளார். ஒருபுறத்தில் இது தொடர்ச்சியாக மந்திரிப்பதவி வகிப்பதற்கு மிக இலகுவான வாதமாகும். அவர் ஒரு அரசாங்கத்திலிருந்து இன்னொரு அரசாங்கத்துக்குத் தாவுவதற்கான தனது நோக்கத்தை வெளிப்படையாகச் சொல்லியவாறு திரிகிறார். இதனால் தொழிலாளர்கள் ஒட்டு மொத்தமான முறையில் ஏதாவது உருப்படியான பலன்களைப் பெற்றுக் கொள்ள முடியவே யில்லையென்பது பகிரங்க இரகசியமாகும்.

ஆனால், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் தான் என்ன செய்கிறார்? இ.தொ.கா. மலையகத் தொழி லாளர்களின் முதுகில் சவாரி செய்வதை தவிர வேறு எதையுமே சாதிக்கவில்லை, அதன் தலைவர்கள் துரோகிகள், கையா லாகாத்தனம் கொண்ட கேவலமான மனிதர் என்றெல்லாம் கடந்த தேர்தல் காலத்தில் ஈவிரக்கமின்றிச் சாடினாரல்லவா? தேர்தலில் வெற்றி பெற்றதும் அரசாங்கத்தில் சேர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. மந்திரிப் பதவியும் கிடைத்து விட்டது, போராட்டம் பற்றி பேச்சே கிடையாது. தொழிலாளர் காணி உரிமையைத் தானும் பெற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர். இதை ஏன் அவர் தட்டிக் கேட்கத் தயங்குகிறார்? தனியார் மயப்படுத்தலை அறிக்கையளவில் எதிர்த்தால் போதுமா?



இவற்றுக்கப்பால் சந்திரசேகரன் இன்று இளைஞர்களுக்கெதிராக வன்முறை பிரயோகிப்பதாகவும் அவர்கள் கைது செய்யப்படுவதற்கும் காரணமாயிருக்கிறாராம்.

அண்மையில் தான் தலவாக்கலையில் ஒரு கூட்டத்தில் பங்குபற்றியதாகக் கூறிய கலாநிதி கருணாரத்ன தொழிலாளர்கள் மலையகத் தொழிற்சங்கங்கள் மீது கொண்டிருக்கும் பாரிய வெறுப்பினை காணக்கூடியதாயிருந்தது என்று கூறினார். அவை உண்மையில் தொழிற்சங்க "வியாபாரம்" செய்கின்றனவே தவிர தொழிலாளர்களின் நலன்களில் அக்கறையில்லாமல் அல்லது கையாலாகத் தனத்தில் செயற்படுவதால் தொழிலாளர்கள் பெரிதும் அங்கலாய்த்துக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

## தமிழ் மக்கள் அரசியல் நீரோட்டத்திலிருந்து அகற்றப் படுகின்றனரா?

**நவாலிப் படுகொலைகள்**
**குமரபுரக் கொலைகள்**
**கிண்ணியடி வீடெரிப்புக்கள்**
**சிறைச்சாலைக் கைதிகள் மீது கொடூரத் தாக்குதல்கள்**
**கொழும்பில் 3 வயது பாலகனும் தாயுடன் சிறையில்**

மேற்படி சம்பவங்கள் எதனைக் காட்டுகின்றன. இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் இந்த நாட்டின் கௌரவமான பிரஜைகள் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

பாதுகாப்பு நடவடிக்கை என்னும் போர்வையில் எண்ணற்ற பொது மக்கள் எதுவித மனிதாபிமானமும் அற்ற நிலையில் தடுப்புக் காவலில் வாடுகின்றனர். அண்மையில் நீதிமன்றில் நீதிபதியவர்களே பொலிசாரைப் பார்த்து ஏன் காரணம் இல்லாமல் கைது செய்து இங்க கொண்டு வருகின்றீர்கள்! எனக் கேட்கும் அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

வடபகுதியில் 5 லட்சம் மக்கள் அகதிகளாக நடுத்தெருவில் நிற்கின்றனர். பாடசாலைகள் இயங்கவில்லை, மருத்துவ, சுகாதார வசதிகள் அறவே அற்ற நிலையில், அப்பகுதி காணப்படுகின்றது. மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நடவடிக்கைகளை முடக்குவதற்கு அரசு பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றது.

1987ல் ஏற்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பலனாக கடந்த ஒன்பது வருட காலமாக வடக்கு கிழக்குப் பகுதி ஒரு இணைந்த நிர்வாகப் பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. இது போதாது என்பதாலேயே வடக்கு கிழக்கு பகுதி யுத்த பூமியாக விளங்குகின்றது. இதை உணராத பொ.ஐ.மு அரசாங்கம் வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை, தமிழர் தாயகம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என வலியுறுத்துகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் 62% மேலான வாக்குகளை சந்திரிக்கா அம்மையார் பெற்றார். இந்த தேர்தலில் இவ்வளவு தொகையான வாக்குகளை அம்மையார் பெற்றதற்கு முக்கிய காரணம், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என்பதாலேயாகும். இக் காலப் பகுதியில் முன்னைய ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா போன்று சந்திரிக்காவும் தமிழர் தாயகத்தை ஏற்க மாட்டோம், வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை எனக் கூறியிருந்தால், தமிழ் மக்களின் வாக்குகள் இவவுக்கு எந்தளவிற்கு கிடைத்திருக்கும். கடந்த 17 வருட காலப்பகுதியில்

தொடர்ச்சி.......2ம் பக்கம்

## குமுறும் வடபகுதி வங்கித் தொழிலாளர்கள்
### தென் இலங்கை சகாக்களுக்கு விடுக்கும் வேண்டுகோள்

**அன்பின் தோழர் தோழியர்களே,**

அந்நிய நாடொன்றின் மீதான படையெடுப்பு போன்று வலிகாமத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள், இடப்பெயர்வ, அகதி வாழ்வு, அதனூடு இணைந்த அவலங்கள், சென்ற ஆண்டின் முக்கிய நிகழ்வுகளாகும். நெருக்கடிகள் மிகுந்த சூழ்நிலையில், சங்கத்தின் ஆலோசனைகள், வழிகாட்டல்கள், நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட சூழலில் அதன் உரத்த மௌனம் பலத்த ஏமாற்றத்தினை அளிக்கின்றது. இக்கணமே எமது வாழ்வு என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது அங்கத்தவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் அவர்களுக்கென்ற சுயாதீன அமைப்பை வலியுறுத்துகின்றன. ஏற்கனவே தோல்வியை உறுதிப்படுத்தியுள்ள 3 ம் தரப்பினரான பொதுமக்களில் ஒரு பகுதியினராகிய எமது அங்கத்தவர்களின் இழப்புக்கள் அளவிட முடியாது என்பதை உணர்த்துவதற்காகவே அவர்கள் உயிர் வாழ்கிறார்கள் போலும்.

மேலும் குறைவிருத்தி நாடுகளிலும் 3ம் உலக நாடுகளிலும் இனக்குழுமங்களிடையே மோதல்கள் ஏற்படுத்த குடியியல் யுத்தங்களை ஊக்குவித்தல் என்பன

தொடர்ச்சி....... 3 ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# எண்ணம்

இனவாத அரசியல் இந்த நாட்டில் 1920 களிலேயே துளிர்விடத் தொடங்கியது. இது படிப்படியாக வளர்ச்சி பெற்று அன்று செயற்பட்டு வந்த இலங்கை தேசிய காங்கிரசில் விரிசல் ஏற்பட்டது மட்டுமல்லாமல் 1930 களில் தனிச் சிங்கள அங்கத்தவர்களைக் கொண்ட மந்திரி சபையும் தோற்றம் பெற்றது. பின்பு 1940 களில் சிங்கள மகாசபா, அதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய அரசியல் இயக்கங்கள் இனரீதியில் முடுக்கி விடப்பட்டன. இந்த இனவாத பிற்போக்கு வாதப்பாதையில் "தனிச்சிங்களம்" மற்றும் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன. இதன் தொடர்ச்சியாகவே பௌத்த மதத்துக்கு விசேட அந்தஸ்து என்ற நிலைப்பாடு மேலோங்கி சிங்கள பேரினவாதமாக உருவெடுத்தது. இதுதான் இன்று ஐக்கிய கிறிஸ்தவ காங்கிரஸ் என நாமம் சூட்டி மதரீதியிலான அரசியல் கட்சியொன்று வேண்டுமென்று எண்ணுமளவுக்கு, இலங்கை அரசியல் சாக்கடை நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளதற்குக் காரணமாகும். இது ஒரு பாரிய சாபக்கேடாகும். பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் தமது ஆரம்ப கால இலட்சியங்களைத் துறந்து, முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டரசாங்கம் நடத்தி வந்தமையும். இச் சாபக்கேட்டுக்கு அதிக வலுவூட்டியுள்ளன.

இதன் பின்னணியில் சற்றுமுந்திய காலகட்டத்தில் தான் காலஞ் சென்ற விஜயகுமாரதுங்க அரசியலில் பிரவேசித்தார். ஒரு முற்போக்கு சிந்தனையாளரான அவர் தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவாளராகவும், எல்லா இன மக்களினதும் சமத்துவம் பேணி மதிக்கப்பட வேண்டும் என்ற பற்றுறுதி உடையவராகவும், இடதுசாரிகள் என்றும் ஓரணியில் நின்று செயற்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டாளராகவும் திகழ்ந்தார். அவர் செய்த தியாகங்களையே சந்திரிகா அம்மையார் பயன்படுத்தி முன்னேறினார். ஏனென்றால் அரசியல் அரங்கில் சிறிமா அம்மையார் அல்லது புதல்வர் அனுர பண்டாரநாயக்க பெற்றிருந்த செல்வாக்கு வேறு, சந்திரிக்கா அம்மையாரின் நிலைமை வேறு.

விஜயகுமாரதுங்கா படுகொலை செய்யப் பட்டதையடுத்து அமைக்கப்பட்ட ஐக்கிய சோசலிச முன்னணியினூடாகவே அதன் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்திரிக்கா சற்று செல்வாக்கையும் நம்பகத்தன்மையையும் நாட்டில் பெற்றார். தொழிலாளி வர்க்கமும் அதே போல் சிறுபான்மையின மக்களும் ஐ.சோ.மு. வினை சற்று புத்துணர்ச்சியுடன் நோக்கினர். ஐ.சோ.மு. பின்பு செயலிழந்து விட்ட போதும் அதில் அங்கம் வகித்திருந்த அதே சக்திகள் தான் ஒன்று சேர்ந்து பின்பு மீண்டும் சந்திரிக்கா தலைமையில் பொதுஜன முன்னணியை உருவாக்கின. பொ.ஜ.மு. வில் நவசம சமாஜக் கட்சி அங்கம் வகிக்கவில்லை என்பது தெரிந்ததே.

வரலாற்று ரீதியில் நோக்குமிடத்து விஜயகுமார துங்கவின் இடத்தையே சந்திரிக்கா தட்டிக் கொண்டார் என்றே கொள்ள வேண்டும். இந்த வகையில் விஜய அரசியலில் ஆற்றிய பங்களிப்பும் செய்த இன்னுயிர் தியாகமும் பாழாக்கப் பட்டுள்ளதென்று சொன்னால் அதில் தவறேதும் இருக்க முடியாது. ஏனென்றால் சந்திரிக்காவில் நம்பிக்கை வைத்து அவரைப் பதவியில் அமர்த்திய அதே சக்திகளாகிய தொழிலாளர்களையும் சிறுபான்மையின மக்களையும் நட்டாற்றிலும், நடுத்தெருவிலும் அவர் விட்டுவிட்டார்.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிக்கட்சியாக வெற்றி பெற்றிருக்கவே முடியாது. எனவே ஏற உதவிய ஏணியை உதைத்த கதையாகவே மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியிருக்கிறது.

நாம் விஜயகுமாரதுங்கவின் புகழ்பாடிகள் அல்ல. ஆனால் அவர் தனக்குச் சரியெனப்பட்ட விதத்திலாவது தொழிலாளர் மற்றும் சிறுபான்மையின மக்களின் உரிமைகளுக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்தவர் என்பதை ஞாபகப்படுத்துவது எமது கடமையாகும்.

# தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தளர்ந்த நிலையும்

1970ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், தமிழ் அரசுக் கட்சியின் தலைமைகளும், தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைமைகளும், படுதோல்வியடைந்தன. ஒரு சில மூன்றாம் நிலைத் தலைவர்களே இத்தேர்தலில் வெற்றி பெற்றிருந்தனர்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை வெறும் பாராளுமன்ற நடவடிக்கைகள் மூலம் வென்றெடுக்கலாம் என்கின்ற ஆழமான மத்திய வகுப்பு சிந்தனைக்கு அடிமைப்பட்டு வந்தவையே இக் கட்சிகளாகும். காலப்போக்கில், பாராளுமன்ற ஆசனங்களை இழப்பதென்பது இவர்களால் ஜீரணிக்க முடியாத ஒரு விடயமாக அமைந்து விட்டது. மறுபுறத்தில், மேற்படி கட்சிகளின் மாயா ஜால கதைகளில் வெறுப்புற்ற தமிழ் பேசும் மக்கள், புதிய கருத்துக்களை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினர். இதேவேளை இடதுசாரிகளின் துணையுடன் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதிய அரசாங்கமும் பதவிக்கு வந்தது. வரலாற்றில் என்றும் இல்லாத அளவில், பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம், தமிழ் மக்களுக்கு எதிராக பல்வேறுபட்ட அடக்கு முறை நடவடிக்கைகளை மேற்கொண்டது. தமிழ் மாணவர்களின் உயர்கல்வியை தரப்படுத்தல் என்னும் நடவடிக்கையின் மூலம் குழிதோண்டிப் புதைத்தது. தோழர் கொல்வின் ஆர்.டி.சில்வாவின் முதலாவது குடியரசு அரசியல் யாப்பு தமிழ் மக்களுக்கு முன்னைய அரசியல் யாப்பில், வழங்கப்பட்டிருந்த அற்ப சலுகைகளைக் கூடத் துடைத்தெறிந்தது. இவற்றுக்கெதிராக போராடிய தமிழ் இளைஞர்களை ஈவிரக்கமற்ற அடக்குமுறை நடவடிக்கைகளால் துன்புறுத்தி வதைத்தது.

எனவே, அதிகரித்துவரும் தமிழ் தேசிய இன விடுதலை வேட்கைக்கும், தமிழ் இளைஞர்களின் உணர்ச்சிகர எழுச்சிக்கும், புதிய அரசியல், கருத்தை முன்வைப்பதன் மூலமே தமது பாராளுமன்ற அரசியலை நிலைநிறுத்த முடியும் என்பதை தமிழ்த் தலைவர்கள் தெளிவாக உணர்ந்தனர். இதனால் உருவானதே தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற கட்சியும், தமிழ் ஈழக் கோரிக்கையும் ஆகும்.
(இன்று தமிழ் ஈழம் என்கின்ற பதம் தமிழ் அரசியல் அமைப்புக்களில் இருந்து காலாவதியாகி விட்டது).

1977ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், வடக்கு கிழக்கு பகுதிகளின் அனைத்து தொகுதிகளிலும் (ஒரு சில தொகுதிகள் தவிர) தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றியீட்டியது. தலைவர் அமிர்தலிங்கம் பலாலி விமான நிலையத்தில் வைத்து மக்களுக்கு உரையாற்றும் போது பின்வருமாறு கூறினார்:-

"அடுத்த பொதுத் தேர்தலுக்கு உங்கள் முன்வாக்கு கேட்டு வந்தோமானால், எங்களை அனுப்பும் இடம் பாராளுமன்றமாக இருக்காது, மனநோய் மருத்துவமனைக்கே அனுப்ப வேண்டும்".

1948க்கு பின்பு தமிழ் காங்கிரஸ் கட்சியும், தமிழ் அரசுக் கட்சியும், அரைகுறைத் தீர்வுகளுக்காவே தம்மை அடகு வைத்து வந்துள்ளன. ஆரம்பத்தில் 50க்கு 50 என உரிமை கேட்ட ஜீ.ஜீ. பொன்னம்பலம் மந்திரி பதவியுடன் சமாதானம் அடைந்தார். மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது இக்காலப் பகுதிகளில் தான், ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் அரசியல் நடவடிக்கைகளை எதிர்த்து வெளியேறிய தலைவர் செல்வநாயகம், தமிழ் அரசுக் கட்சியை உருவாக்கினார். பல போராட்டங்களை நடத்தி அதன் மூலம் தமிழ் மக்களின் உரிமை போராட்டத்துக்கு புதிய அர்த்தம் வழங்கப்பட்டது. வரலாற்று புகழ்மிக்க பண்டா-செல்வா அரசியல் ஒப்பந்தம் உருவாகுவதற்கு இவர்களின் அரசியல் நடவடிக்கைகள் காரணமாக அமைந்தன.

தமிழ் அரசுக் கடசியின் இத்தகைய தீவிர போக்கு நீண்டகாலம் நிலைக்கவில்லை. 1965ம் ஆண்டு டட்ல சேனநாயக்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்ற பொழுது, அக் கட்சியுடன் இணைந்த தேசிய அரசாங்கம் ஒன்றை தமிழ் அரசுக் கட்சி உதவியது. திருச்செல்வத்துக்கு மந்திரி பதவி வழங்கப்பட்டது. (இவர் த.வி. கூட்டணி தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் திருச்செல்வத்தின் தந்தையாளர்) அதே நேரம் தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பாக தலைவர் சிவசிதம்பரத்துக்கு பிரதி சபாநாயக பதவி வழங்கப்பட்டது. இக் கட்சிகளில் இருப்பவர்களுக்கு சில சலுகைகள் கிடைத்தனவே தவி தமிழ் மக்களுக்கு எந்த ஒரு உரிமையு வழங்கப்படவில்லை. இதன் விளைவாகவே இவர்கள் 1970ல் நடைபெற்ற தேர்தலில் படுதோல்வி அடைந்தனர் மீண்டும் 1977ல் யூ.என்.பி. பதவிக்கு வந்தபோது ஜே.ஆர் ஜெயவர்தனாவால் வழங்கப்பட்ட மாவட்ட சபை தீர்வு திட்டத்தை முழுமனதாக த.வி.கூட்டணியினர் ஏற்று கொண்டனர். இத்தீர்வுத் திட்டத்தை தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்திய எந்த ஒரு தமிழ் இளைஞ அமைப்பும், இடதுசாரிகளும் ஏற்றுக் கொள்ளவில்லை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல்களை தமிழ் சமூகமே பகிஸ்கரித்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டும் அரசாங்க கட்சிக்கு எதிராக போட்டியிட்டது. சில காலம் கழித்து மாவட்ட அபிவிருத்திச் சபை முறையில் ஒன்றுமே இல்லை என்று இவர்களே பின்பு கருத்து வெளியிட்டனர்.

1980க்கு பிற்பட்ட காலப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செல்வாக்கு மங்கி மறையத் தொடங்கி விட்டது. தமிழ் இளைஞர்களின் ஆயுதஎழுச்சி போராட்டம் அதி உச்ச நிலையை அடையத் தொடங்கி விட்டது. எனவே 1987ல் வடக்கு கிழக்கு தற்காலிகமாகவேனும் இணைந்த இலங்கை இந்திய ஒப்பந்த தீர்வுத் திட்டத்தில் இவர்களின் செல்வாக்கு பெரியளவில் இருக்கவில்லை.

இன்று சந்திரிக்கா அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தை முதன் முதலாவதாக ஆதரித்து கருத்து வெளியிட்ட கட்சி த.வி.கூட்டணியாகும் உண்மையில் சந்திரிகா அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தில் –

(1) வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை
(2) தமிழர் தாயகம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை
(3) உத்தேச சபைகளை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு
(4) காணி விடயத்தில் பிராந்திய சபைக்கு உள்ள அதிகாரம் தெளிவில்லை

போன்ற அடிப்படை விடயங்கள் கூட ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இத்தீர்வுத் திட்டம் சம்பந்தமாக சகல தமிழ் அரசியல் அமைப்புகளும், தமது அதிருப்தியை தெரிவித்து விட்டன. தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டும் உற்று நோக்குகின்றோம், ஆழ்ந்து ஆராய்கின்றோம் என் அறிக்கை விடுகின்றனரே தவிர தீர்வுத் திட்டத்தில் உள்ள பெரும் பிழைகளை பற்றி கருத்து தெரிவிக்கவில்லை. தமிழ் அரசியல் கட்சிகளின் வரலாறு முழுக்க கிணறை தாண்டுவதற்கு பாயும் போது அரைவழியில் நின்று கொஞ்ச நேரம் யோசிப்போமா? என்கிற போக்கிலேயே அமைகின்றது. வரலாறு முழுக்க ஏமாந்து விட்டோம், ஏமாற்றி விட்டார்கள் என்று அழுது புலம்புவதே பாரம்பரியமாகி விட்டது.

5 லட்சம் மக்கள் இன்று நடுத்தெருவில் நிற்கின்றார்கள் எனவே அரைகுறை தீர்வுகளை அம்மையாரின் முகத்துக்காக ஏற்பார்களாயின் அது தமிழ் மக்களுக்கு செய்யும் பெரும் துரோகமாக இருக்கும் என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது. ■

## தமிழ் மக்கள் அரசியல் நீரோட்டத்திலிருந்து

...... 1 ம் பக்கம் தொடர்ச்சி

இனப்பிரச்சினையை மிக மோசமாக்கியதால் தான் யூ.என்.பி யை இலங்கை மக்கள் வெறுத்து ஒதுக்கினர். இதை உணராத படித்த சட்ட மேதை யூ.என்.பி யிடம் போய் முழங்காலில் நிற்கின்றார் இனப் பிரச்சினையை தீர்க்க உதவுங்கள் என்று.

முன்னைய யூ.என்.பி அரசு கூட வடக்கு-கிழக்கு பகுதியை தற்காலிமாகவேனும் இணைந்து ஒரு தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கியது. அதைவிட குறைவாக வழங்கவே பொ.ஜ.முன்னணி அரசு இப்போது பெரும் முயற்சி செய்கின்றது.

இத்தகைய போக்குகள் நீடித்தால் தமிழ் மக்கள் தேசிய நீரோட்டத்தில் இருந்து விலகியே செல்வார்கள். அது மாத்திரமல்லாமல் அம்மக்களிடம் விரக்தியும் வேதனையும் அதிகரித்துக் கொண்டே செல்லும் இதனால் அரசுக் கெதிரான அவர்களது போராட்டங்கள் மிகவும் கொடுமையான நடவடிக்கைகளைக் கொண்டுவரும். இதையே அண்மைக் காலத்தில் நடைபெற்ற அழிவு நிகழ்ச்சிகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. ■

படிப்பகம்

www.padippakam.com



# போலந்தில் நடப்பது என்ன?

போலந்தில் சமூக ஜன நாயகக் கட்சி வேட்பாளர் அலெக்ஸாண்டர் கவஸ்நெவஸ்கி நாட்டின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் முன்னைய கம்யூனிஸ தலைவர்களுள் ஒருவராவார். இவரது வெற்றியானது முன்னைய தலைவரான வலேசாவினதும் அவருடைய "சோலிடார்நொஸ்க்" அமைப்பினதும், செயற்பாட்டில் மக்கள் கொண்ட வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளது. நவீன சீர்திருத்தம் என்னும் துருப்பிடித்த முதலாளித்துவ கொள்கைகளை போலந்து மக்கள் இத்தேர்தல் மூலம் நிராகரித்துள்ளனர்.

பதவியை விட்டுச் செல்லும் போலந்தின் முன்னை நாள் தலைவரான லெக்வலேசா புதிய அரசுக்கு பல வழிகளிலும் தொல்லைகளை ஏற்படுத்தக் கூடிய நிலைகளை ஏற்படுத்தி விட்டே செல்கின்றார். 1989ம் ஆண்டு காலப்பகுதியில் சிறு அளவிலான தனியார் பகுதியினரும், உயர்ந்த நிலையில் இருந்த அதிகார வர்க்கத்தினருமே, போலந்து நாட்டில் அதிக வருமானத்தை பெறுபவர்களாக விளங்கினர். ஆனால் இன்று போலந்து நாட்டின் ஏற்றத் தாழ்வு அபிவிருத்தியடையாத ஒரு முதலாளித்துவ நாட்டின் ஏற்றத் தாழ்வுகளுடன் ஒப்பிடக்கூடிய அளவுக்கு இடம் பெறுகின்றது.

1989ல் 8400 அரச நிறுவனங்கள் போலந்தில் இருந்தன. ஆனால் 1995 யூலையில் 1596 நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டு விட்டன. மேலும் 3297 நிறுவனங்கள் விரைவில் தனியார் மயமாகப் போகின்றன. 1989ல் போலந்தின் வர்த்தக நடிவடிக்கைகள் யாவும் சோவியத் யூனியனுடனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் இடம்பெற்றன. இன்று 64.4% இறக்குமதிகளும், 71.2% ஏற்றுமதிகளும், ஐரோப்பிய கூட்டமைப்புடனேயே நடை பெறுகின்றன. போலந்து நாட்டின் நாணயமான சொலொற்றி மாற்றியமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணயங்களின் மதிப்பீடு சந்தை நிலமைகளையும், பணவீக்க நிலமைகளையும், கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன. வங்கிகளுக்கு அரச கட்டுப்பாட்டில் இருந்து விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. வங்கியின் தலைவர்கள் தேர்தல்களில் தலையிடும் உரிமை உள்ளவர்களாக காணப்படுகின்றனர்.

போலந்து நாட்டின் இராணுவத்தில் உள்ள அரசியல் அலுவலர்களின் இடத்தில் கத்தோலிக்க மதபீடத்தின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. "நேற்றோ" நாடுகளின் சார்பின் போக்கில் போலந்து இராணுவ தலைவர்கள் இயங்குகின்றனர். விரைவில் தாம் "நேற்றோ" இராணுவ அமைப்பில் சேர்ந்துவிடப் போவதாகவும் இராணுவ தலைமை நம்புகிறது. போலந்து நாட்டு பொலிஸ்படையும் குறிப்பாக அரசியல் பொலிஸ்படை முற்றும் முழுதாக மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது.

எனவே அலெக்ஸாண்டர் கவஸ்நெவஸ்கி ஒரு ஸ்டாலினிச வாதியாகவும் காணப்படவில்லை. அதேவேளை தீவிர கம்யூனிசவாதியாகவும் காணப்படவில்லை. இவரது போக்கு சீர்திருத்தத்தை விரும்பும் போக்காகவே காணப்படுகின்றது.

சமூக ஜனநாயக கட்சியின் இரண்டு வருட பதவிக் காலத்தில் கவஸ்நெஸ்கிக்கு சார்பாக பல விடயங்கள் நடைபெற்று உள்ளன. சம்பளம் 2.8% அதிகரிக்கப்பட்டது. வேலையற்றோர் விகிதம் 1.5% ஆக குறைந்துள்ளது. தேசிய உற்பத்தி 6% ஆக அதிகரித்துள்ளது. ஆலை உற்பத்தி தொழில் 10.8% ஆக அதிகரித்திருக்கிறது. வரவு செலவுத் திட்ட துண்டு விழும் தொகை குறைந்துள்ளது. நடைபெற்ற தேர்தலில் லெக் வலேசா கம்யூனிசத்துக்கு எதிரான கருத்துக்களையே முன் வைத்தார். இவருக்கு சார்பாக சீர்திருத்த வாதிகளும், போலந்து நாட்டின் பிற்போக்கு வாதிகளும், செயற்பட்டு வருகின்றனர். வலேசா முன்னைய கம்யூனிச வாதிகளின் குடியுரிமைகளை தடை செய்வதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்தார். அது பலனளிக்கவில்லை.

நடைபெற்ற தேர்தலில் வலேசா பொதுத் தேர்தலில் எடுத்த வாக்குகளை விட அதிகமாக பெற்றுள்ளார். எதிர்காலத்தில் வலதுசாரிகள் மத்தியில் அவர் ஒரு பலமான சக்தியாகவே விளங்குவார். போலந்தின் கத்தோலிக்க பேராயர்களும் புதிய போலந்து நாட்டின் தலைவருக்கெதிராக கிளம்பியுள்ளனர். வலேசாவின் போராட்டத்துக்கு இவர்கள் தமது பங்களிப்பையும் நல்குவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்க முடியாது.

போலந்து இன்று இரண்டு அணிகளுக்கிடையே சிக்கியுள்ளது. பழைய கம்யூனிஸ்ட் கட்சி சார்பான புதிய சீர்திருத்த கொள்கையுடைய கவ்நெவஸ்கி ஒருபுறமும், கம்யூனிச எதிர்ப்பும், கத்தோலிக்க மத ஆதரவுமுடைய சோலிடார்நொஸ்க் அமைப்பு மறுபுறத்திலும் உள்ளது. இவ்விரு அமைப்புக் களுக்கிடையேயும் போலந்து நாட்டின் தொழிலாளர்களும், விவசாயிகளும், பிரிந்து போய் நிற்கின்றனர். லெக் வலேசாவும், சொலிடார்நொஸ்க் தலைவர்களும் இம் முரண்பாட்டை உள்நாட்டு யுத்தமாக மாற்ற முயற்சிக்கின்றனர். இத்தகைய எதிர்நோக்கிற்கு போலந்து நாட்டின் விவசாயிகள் கட்சி ஆதரவு வழங்குமாயின், சமூக ஜனநாயக் அரசு செயல் இழக்கும் நிலை தோன்றும்.

புதிய அரசியலைமைப்பின் கீழ் தனியார் மயப்பீடுத்தலுக்கான சர்வஜன வாக்கெடுப்பு இவ் வருடத்தில் நடைபெற இருக்கின்றது. கவஸ்நெவஸ்கி கருச்சிதைவு சட்டத்தை சீர்திருத்துவதாக வாக்குறுதி அளித்துள்ளார். தற்போதைய சமூக ஜனநாயக அரசாங்கம் தனியார் மயமாக்கலை தீவிரப்படுத்தப் போவதாகவும் உறுதி வழங்குகியுள்ளது. குறிப்பாக பெரிய ஆலைகளையும், வங்கிகளையும் தனியார் மயமாக்க இருக்கின்றனர்.

தேர்தல் காலங்களில் வலேசாவுக்கு ஆதரவான குழுக்கள் 6 லட்சம் கையெழுத்திட்டு கவ்ஸ்நெவஸ்கியை தேர்தலில் இருந்து அகற்றுவதற்கு முயற்சி செய்தது. இறுதியாக வலேசா பிரதம மந்திரியைக் கூட ருசிய இரகசிய அமைப்புடன் தொடர்புடையவர் எனக்கூறி சமூக ஜனநாயக அமைப்புக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார்.

வலேசாவுக்கும் போலந்து பாராளுமன்றத்துக்கும் இடையே வருடக் கணக்காக நடைபெற்ற இழுபறி நிலையினால், இராணுவம் சுயாதீன சுழற்சி நிலையை அடைந்துள்ளது.

1995 மார்ச் மாதத்தில் இராணுவ அலுவலர்களின் வற்புறுத்தலுக்கிணங்க, பாதுகாப்பு அமைச்சர் இராஜினாமாச் செய்துள்ளார். யூன் மாதம் அளவில் இராணுவத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாளில், இடதுசாரிகள் எமக்கு எதிரிகள் என்ற செய்தி பிரசுரமாகியிருந்தது. இதேவேளை கடந்த தேர்தலில் இராணுவம் வெளிப்படையாகவே வலேசாவுக்காக தேர்தலில் ஈடுபட்டது. இராணுவத் தளபதி வில்கி வெளிப்படையாகவே அரசியலை விமர்சித்து உள்ளார். அரசியல் வாதிகள் நாட்டை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்கின்றார்கள் என இவர் கூறியிருந்தார்.

போலந்து நாட்டில் எப்போதும் குடியியல் அதிகாரம் இராணுவ அச்சுறுத்தலுக்கு உள்ளாகியே வந்துள்ளன. மதவாதிகளினதும், பிற்போக்காளர்களினதும் கண்டன நடவடிக்கைகள் வீதிக்கு வந்துள்ளன. சமூக ஜனநாயக வாதிகளின் அரசு அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய நிலையிலேயே காணப்படுகின்றது. மிகவும் கன்னிப்பருவ நிலையில் இருக்கும் போலந்து ஜனநாயகம் நீண்டு நிலைக்குமா என்பதை போலந்து மக்களின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. ■

## குமுறும் வடபகுதி வங்கித் தொழிலாளர்கள்

...... 1ம் பக்க தொடர்ச்சி

ஏகாதிபத்தியத்தின் இருப்பினை உறுதி செய்கின்றன. தேசங்களின் எல்லையை மீறிச் செல்லும் மூலதனங்கள் இலங்கையின் மூன்றாம் நாடாகிய வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் குடியியல் யுத்தங்கள் நாட்டின் இறைமை, தேசஐக்கியம், ஒருமைப்பாடு, சுயநிர்ணய உரிமை போன்ற பதங்களின் எண்ணக்கருக்களை கேள்விக்குறி ஆக்கியுள்ளன. நாம் எதைப் பேசினாலும் அது அரசியல் என வியாக்கியானப்படுத்தும் அளவுக்கு யுத்தம் எம்மை ஆக்கிரமித்துள்ளது. யுத்தத்தினால் நாம் எமது வாழ்க்கை முறை, பண்பாடு, மரபுபேணுகை என்பவற்றை இழந்து எமது சுய அடையாளத்தை தேடும் ஓர் மன உணர்வுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பசுமை நிறைந்த நினைவுகளுடன் கூடிய இறந்த காலமும், அவலங்கள் நிறைந்த நிகழ்காலமும் நம்பிக்கையற்ற விரக்தி யுடனான எதிர்காலமும் எமது இருப்பிற்கு சவாலாக அமைந்துள்ளன. ஆதலால் படையெடுப்புக்கள் தனியுத்த நடவடிக்கைகள் மட்டுமல்ல, ஒரு பண்பாட்டின் மீதான ஆக்கிரமிப்புமாகும்.

நெருக்கடிகள் மிகுந்த இக்காலகட்டத்தில் வங்கி முகாமைத்துவங்கள் இயங்கினால் போதும் என்ற மனப்பான்மையுடனேயே செயல்படுகின்றன. அதன் முதுகெலும்பாகிய ஊழியர்களின் குறைபாடுகள், சேமநலன்கள் குறித்து போதிய அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இதனால் ஏற்கனவே பாதிப்புக்கு உள்ளான எமது ஊழியர்கள் "மரத்தால் விழுந்தவனை மாடு மிதிப்பது" போன்று, மேலும் அவலங்களுக்கு உள்ளாகின்றார்கள். எமது வங்கிகளில் வடபகுதி நிர்வாகத்துக்கு பொறுப்பாக உதவிப் பொது முகாமையாளர்கள் பணியாற்றுகின்ற பொழுதும் அவர்களின் நடவடிக்கைகள் யுத்த காலங்களில் போதிய திருப்தியை தருவதாக இல்லை.அரசியல் சூழ்நிலைகள் எவ்வாறு இருந்த பொழுதிலும் இவர்களின் தனிப்பட்ட குணாம்சங்கள் இவர்களது ஆளுமையை பெரிதும் பாதிக்கின்றன. உள்ளூர் முகாமைத்துவத்தை பொறுத்தவரையில் ஒரு சிலர் குறுநில மன்னர்களாகவே காட்சியளிக்கின்றனர். கட்டடும் ஒழுங்கும் சீர்குலையாத இயல்பு நிலையுடன் கூடிய ஒரு குடியியல் சமூகத்தில் எதிர்பார்க்கப்படும் ஊழியர்களின் சட்டதிட்டங்களுக்கு அமைவான கடப்பாடுகளையும் ஒத்துழைப்பையும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர். மேலும் நிறுவன விசுவாசமும் தமது சாதனைகள், திறமைகள் போன்றவற்றை வெளிக்காட்ட முயலும் மத்தியதர வர்க்க குணாம்சமும் இவர்களின் செய்கைகளில் பிரதிபலிக்கின்றன. மேலும் மேலிருந்து கிடைக்கப்படும் சலுகைகள், வரப்பிரசாதங்கள் கீழுள்ளவர்களுக்கு சுவற விடாமல் தடுப்பதில் அதிக அக்கறை செலுத்துகின்றனர்.

தென்னிலங்கைத் தோழர்களே

இருள் சூழ்ந்த இன்றைய காலகட்டத்தில் எமக்கு கைகொடுத்து உதவக் கூடியவர்கள் நீங்களே. ஆகையால் உங்கள் சகாக்களாகிய நாங்கள் படும் துயரங்களை ஒரு முடிவுக்கு கொண்டுவர உங்கள் குரல் எமக்கு அத்தியாவசியமாகும். இத்தகைய மாபெரும் பணியை நீங்கள் தனித்து நின்று சாதிக்க முடியாது. ஏனைய தொழிற்சங்கங்கள் முற்போக்கு சக்திகள், மனித உரிமைக் குழுக்கள் போன்ற எமது தேசிய அணியுடன் இணைந்து குரல் கொடுப்பதன் மூலமே இதனை சாதிக்கலாம். பேரினவாத சக்திகள் மேலோங்கிய நிலையில் உங்கள் பணி மிகவும் சிக்கல் நிறைந்த ஒன்றாகும். ஆனால் சாத்தியப்படாத ஒன்றல்ல. இத்தருணத்தில் ஒரு சீனப் பழமொழியை நினைவூட்ட விரும்புகின்றோம்.

"ஆயிரம் மைல்களுக்கான பயணம் முதலடி எடுத்து வைப்பதன் மூலமே ஆரம்பமாகிறது".

தொடரும் யுத்தத்தினால் ஏற்படும் செலவினத்தை அரசு உங்களிடமிருந்தே பெறுகின்றது. மானியங்கள் வெட்டப்படுகின்றன. விலைவாசிகள் உயருகின்றன. அபிவிருத்திகள் காகிதத்திலேயே இடம் பெறுகின்றன. இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க எமக்காகவும் உங்களுக்காகவும் குரல் கொடுங்கள். வங்கியில் சேர்ந்தோம். பரீட்சைகளில் தோற்றியுள்ளோம். பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் பெற்றோம். சமூகத்தில் புகழ், அந்தஸ்தினைப் பெற்றோம். என்று மட்டும் இல்லாமல் ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும் குரல் கொடுத்துப் போராடுவதன் மூலமே எமது வாழ்க்கை அர்த்தமுள்ள ஒன்றாக அமைய முடியும். இல்லையேல் நாம் வரலாற்றில் அனாமதேயங்களாகி விடுவோம். ஏகாதிபத்திய சக்தியினால் ஒடுக்கப்பட்டவர்களினதும் தொழிலாளர்களினதும் வாழ்க்கை சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளது. இவர்களை வெல்வதன் மூலமே எமது வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதொன்றாக, எமது வாழ்க்கை பயனுள்ளதொன்றாக அமையும்.

"வாழ்க்கை அழகானது அதை நாம் அனுபவிப்போமாக"

என்ற ஓர் அறிஞனின் கூற்றினை இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம். ■

படிப்பகம்

www.padippakam.com



# தனியார் மயமாக்கலால் தவிக்கும் மலையக மக்கள்

இன்று மலையகத்தில் தனியார் மயமாக்கல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றது. தனியார் மயமாக்கலை ஆதரித்து வெளியிடப்படும் விளம்பர நடவடிக்கைகள் உச்ச நிலையை அடைந்துள்ளன. முன்னைய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இந் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டபோது, அதனை மிகத் தீவிரமாக எதிர்த்த சிவப்பு, நீலக் கட்சியினர் இன்று முன்னயதை விட இந்நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளனர். முன்னர் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் வழங்கப்பட வேண்டியுள்ள மீதி ரூ3/- சம்பள உயர்வு இதுவரை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளால், பல்வேறுபட்ட சமூக பொருளாதார பிரச்சினைகளை மலையக மக்கள் எதிர் நோக்குகின்றனர். மலையக தோட்டத்து தொழிலாளர்களின் வேலை நாட்கள் 26ல் இருந்து தற்போது 18 ஆக குறைவடைந்துள்ளது.

தோட்டப்பகுதியில் உள்ள வயது வந்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு அற்று மிகவும் விரக்தியுற்ற நிலையில் காணப்படுகின்றனர். மலையக மாணவர்களின் கல்வி வசதி மிக மோசமான நிலையை அடைந்துள்ளது. 500 மாணவர்கள் கல்விகற்கும் ஒரு பாடசாலையில் 5 அல்லது 6 ஆசிரியர்களே உள்ளனர். மலையகத்தில் உள்ள நாற்பது சதவீதமான இளைஞர்கள் அடையாள அட்டை இன்றி காணப்படுகின்றனர். இதனால் இவ் இளைஞர்கள் கொழும்பு போன்ற பகுதிகளில் வேலை வாய்ப்பு பெறமுடியாதவர்களாக உள்ளனர். மலையக இளைஞர்களை அவசியமற்று கைது செய்து தடுப்புக் காவலில் வைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

மலையக மக்கள் விவசாயத்தை தமது உப தொழிலாகக் கொண்டு தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஆனால் அந்த சந்தர்ப்பம் கூட இப்போது தட்டிப் பறிக்கப்பட்டுள்ளது. தனியார் கம்பனிகள் தேயிலைத் தோட்டங்களை, தேயிலைப் பயிரை செய்யாது ஓய்வாக விடும் காலங்களில், அத்தோட்டங்களை விவசாய உற்பத்திக்கு தனியாருக்கு வழங்குகின்றது. இதனால் இத் தோட்டங்கள் பெருமளவ மரக்கறி வகைகள் தனியாரால் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றால் மரக்கறி வகைகளின் விலைகள் இப் பகுதியில் வீழ்ச்சியடைந்துள்ளன. இதன் தாக்கத்தில் குடிசைத் தொழிலாக விவசாயத்தைக் கொண்டிருந்த ஏழைத் தோட்டத் தொழிலாளர்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

முன்பு பதவியில் இருந்த அரசாங்கத்துக்கு சார்பாக தொண்டமான் மட்டுமே செயற்பட்டார். தற்போது சந்திரசேகரனும் இப்புனித கடமையை செய்யத் தொடங்கியுள்ளதால், அரசாங்கத்தின் தான் தோன்றித்தன நடவடிக்கைகள் எல்லையற்று போகின்றன.

R.K. பெருமாள்

## ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் கூட்டம்

மேற்படி பொதுக் கூட்டம் தங்ககலை தோட்டம் பணிய கணக்கு இடத்தில் 11-2-96ல் தோழர் டீ. காந்தி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தை ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் சிதம்பரம் மோகன், தலைவர் ஆர்.கே.பெருமாள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இக் கூட்டத்திற்கு பிரதான பேச்சாளர்களாக நவசம சமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்தின, ஐக்கிய தொழிலாளர் சம்மேளன பொதுச் செயலாளர் சரணபால சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் மலையக மக்கள் படும் அவஸ்தைகள், இவற்றை போக்க மலையக் மக்கள் எத்தகைய போராட்டங்களை மேற் கொள்ள வேண்டும் என்பவை பற்றி கூட்டத்தில் உணர்ச்சிகர முறையில் பேசப்பட்டது.

மேலும் கூட்டத்தில் மலையக மக்கள் மாணவர், இளைஞர் பேரவை பொதுச் செயலாளர், பி.பிரபாகரன் ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ், நிர்வாகச் செயலாளர் என். ஜோதி, ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் பிரதான அமைப்பாளர் எஸ். சுப்பையா, ஆகியோரும் கலந்து கொண்டனர். இக் கூட்டத்திற்கான வரவேற்பு கமிட்டியில் எஸ். வேலுச்சாமி மாவட்டத் தலைவர், எம். பாலசுந்தரம் மாவட்ட செயலாளர், ஆர்.பி. அனுரா குமார (ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் நுவரெலிய மாவட்டம்) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். ■

## சமாதானத்தை வலியுறுத்தும் ஊர்வலம்

29/02/96 அன்று சமாதானத்துக்கான பெண்கள் முன்னணியினர், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக ஓர் ஊர்வலத்தை நடத்தினர். இவ் ஊர்வலத்தில் பல வெகுஜன அமைப்புக்களின் நூற்றுக் கணக்கான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஊர்வலம் விகாரமாதேவி பூங்காவில் இருந்து ஆரம்பமாகி லிப்டன் சதுக்கம் வரை சென்று பின்பு மீண்டும் விகாரமாதேவி பூங்காவிற்கு வந்தடைந்தது. சமாதானத்தை வலியுறுத்தும் பல்வேறு சுலோகங்கள் இவ் ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்டது.

இவ் ஊர்வலத்தில் நவசம சமாஜக் கட்சியின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அவர்கள் வடபகுதியில் இருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட்டு சுயாட்சி வழங்கப்பட வேண்டும், என்கின்ற சுலோகம் உடைய பதாகைகளை தாங்கிய வண்ணம் ஊர்வலத்தில் சென்றனர். வெறும் பத்திரிகை அறிக்கைகளை மாத்திரம் வெளியிட்டுக் கொண்டு, தமிழ் மக்களின் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம் என நினைப்பவர்களை விட இந் நடவடிக்கை எத்தனையோ வகைகளில் மேலானது என்று கருத வேண்டும். ■

# தேசிய வாத அரசியலும் இடதுசாரி இயக்கமும்

— கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஏகாதிபத்திய கைத்தொழில் முறையிலான தொழில் நுட்பவியல் கண்டிப்பானதொரு சமூக அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதென்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அது முறியடிக்கப்பட்டு, முழு அபிவிருத்தி மாதிரியும் முற்றாக புனரமைக்கப்படுவதும் அவசியமாகும். மேலும், அது "மேலோட்டமான குறைப்பு கருத்தோட்டம்" ஆகிய வரையறைகள் காரணமாக ஒரு நெருக்கடி நிலையில் உள்ளது.

எதுவுமே மண்ணொடு மண்ணாவதும் மாற்றமடைதலுமே இயற்கையின் நியதி என்று இனங்க கண்டுகொள்ள முடியாமையால் நவீனகால விஞ்ஞானம் தனது ஆய்வுகளை முடக்கியுள்ளது. தமது மதங்களின் தத்துவஞானமும், சீரிய இலட்சியங்களும் போதுமானதென்று அடிப்படை வாதிகள் கூறுகின்றனர். இதனையே உலகம் பூராவுமுள்ள மத அடிப்படைவாதிகள் கூறித் திரிகின்றனர்.

ஏங்கெல்ஸ் சுட்டிக் காட்டியுள்ளது போல, விஞ்ஞானம் உதயமாவதற்கு முன்பு, முன்னைய தத்துவஞானிகள் உலகமானது ஒன்றிணைக்கப்பட்ட முழுமையான தொன்று ஆகும் என்று இனம் கண்டிருந்தனர். அவர்கள் உலகத்தில் இயக்கங்களின் ஒன்றாடலேயே ஒழிய பொருட்களின் ஒன்றாடலைக் காணவில்லை. முழுமைநிலைகருத்தை விடுத்து, சிறுவிடயங்களை ஆராய முற்பட்ட போதே பொருட்கள் பற்றிய ஆய்வானது தோற்றம் பெற்றது. இந்த நோக்கில் முழுமை என்பது இயக்கங்களின் ஒன்றாடல் என்று புரிந்து கொள்ளும் போது, அடிப்படைவாத கண்ணோட்டத்தில் சற்று உண்மை இருக்கத்தான் செய்கிறது. எவ்வாறாயினும் இந்த உண்மையினைக் கொண்டு விஞ்ஞான தத்துவத்தை மாற்ற முடியாது. இத்தகையதானதொரு சர்வதேச தொடர்பினை ஏற்படுத்துவதை விடுத்து அடிப்படை வாதிகள் குறுகிய போக்கினையும், தம்மத்தியில் நம்பிக்கையின்மையையும், வெறுப்புணர்வையும் வளர்த்து வருகின்றனர்.

இலங்கையில் "ஜாதிக்க சிந்தனய" (தேசிய சிந்தனை) பௌத்த பேரினவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. முன்னைய பௌத்த சமுதாயம் சுற்றாடல்வாத கூட்டுறவுவாத சமுதாயமாயிருந்தது என பௌத்த அடிப்படைவாதிகள் கூறுகின்றனர். எனவே நிலைக்கக் கூடிய அர்த்தமுள்ள அபிவிருத்தியை எட்ட வேண்டுமானால் அவ் அபிவிருத்தி மாதிரி மீட்கப்பட வேண்டுமென்பது அவர்களின் வாதமாகும். ஆனால் ஒரு இயக்கம் என்ற வடிவில் "ஜாதிக சிந்தனய" அவ்வளவு தூரம் சிங்கள கிராமங்களில் வேரூன்றியிருக்கவில்லை. எதுவாயினும், முன்னைய ஆசிய குழு வாழ்க்கை முறை அடங்கலான சனசமூக சபையைக் கொண்ட கூட்டுக் கிராமம் எனப்படுவது ஆரம்பகால வடிவத்தில் இன்று இருக்கவில்லை. எவ்வாறாயினும் உலகவங்கி / சர்வதேச நாணய நிதியம் (உ.வ / ச.நா.நி) மற்றும் ஏனைய ஏகாதிபத்தியவாத நிலையங்களின் நாசகார கொள்கைகளினால் உண்மையாகப் பாதிக்கப்பட்ட இளைஞர்களை இந்த இயக்கம் கவர்ந்து வருவது போல தெரிகிறது. எனவே, இன்று ஜே.வி.பி. இளைஞர்களில் ஒரு பிரிவினர் "ஜாதிக சிந்தன"வை ஆதரிப்பவர்களாகவும் மற்றைய பிரிவினர் மார்க்ஸிச வாதத்தை ஆதரிப்பவர்களாகவும் உள்ளனர். இத்தகைய பிளவுகள் தமிழ்/முஸ்லிம் இளைஞர் இயக்கங்கள் மத்தியிலும் காணப்படுகின்றன.

இருபுறங்களிலுமுள்ள தேசியவாதத்தையும், எழுந்து வரும் மதரீதியான அடிப்படை வாதத்தையும் ஒதுக்கி தீவிரமான இளைஞர்களை சோசலிச இயக்கத்துக்கு கொண்டு வர முடியும் என்பதே எமது அனுபவமாகும். இதன் பொருட்டு நாம் மார்க்ஸிச வாதத்தின் அடிப்படை கோட்பாட்டை கடைப்பிடிக்கும் நிலைக்குச் செல்ல வேண்டும். அதாவது முதலாளித்துவம் தூக்கியெறிப்பட வேண்டுமென்பது மட்டுமல்லாமல், இயற்கையுடன் இசைவானதும் எல்லோரும் பங்குபற்றக் கூடியதுமான முறையில் முழு உற்பத்தி முறையுமே மாற்றியமைக்கப்பட வேண்டும். இத்தகைய முறையின் கீழ் பெண்கள் விமோசனமடைவார்கள் என்பது மட்டுமல்லாமல் சமுதாயத்தைக் கொண்டு நடத்துவதில் உண்மையான தலைவர்களாகவும் திகழ்வார்கள். அவ்வாறாக, அது ஒரு எதேச்சதிகாரமற்ற, சமாதானமான, பங்குபற்றும் நடைமுறைத்திட்டமாக அமையும். அப்படியானால் மட்டுமே சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் எல்லா தேசிய இனங்கள் மத்தியலும் ஒற்றுமை நிலவும்.

புரட்சியானது மனிதகுலம் முழுவதையுமே ஒரே மாதிரியான கைத்தொழில் கலாச்சாரத்தில் அமிழ்த்திவிடும் நடைமுறையாகும் என்று எண்ணுவது தவறாகும். மனித குலத்தின் முன்னேற்றமும் உய்வும் அதன் கலாச்சார மற்றும் இனத்துவ வேறுபாடுகளிலேயே தங்கியிருக்கிறது. எனவே சோசலிசம் தான் உண்மையில் அதிகளவிலான ஜனநாயகத்தையும் சுயாட்சியுரிமையையும் மக்களுக்கு வழங்க வல்லதாகும். அது ஒரு போதும் சுயாட்சி உரிமைக்கு விரோதமான முறையிலான மத்தியப்படுத்தப்பட்ட உலகத்தை உருவாக்கப் போவதில்லை. கிராம மக்கள் குழு (Commune) முறையினை புனரமைப்பது தான் உலக சோசலிசத்தின் அடித்தளமாக இருத்தல் வேண்டும்.

அத்தகையதொரு புரட்சியானது முற்றிலும் வெளியேயுள்ள மக்கட் பிரிவினால் கொண்டு வரப்பட கூடியதல்ல. எந்த ஒரு தேசிய இனமோ, இனத்துவக்குழுவோ தனிவழி சென்று விடுதலை பெற முடியாதென்பதையே, தமிழ் மற்றும் சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சிகள் வெற்றியீட்டாததில் இருந்து அறிய முடிகிறது. உலகம் பூராவுமுள்ள புரட்சிகர சக்திகள் மத்தியில் ஒற்றுமை வேண்டும். அத்தகைய ஒற்றுமையினை முதலாளித்துவ முறைக்கு "வெளியேயிருப்பவர்கள்" அன்டறி அதற்கு "உள்ளேயிருப்பவர்கள்" தான் கட்டி வளர்க்க முடியும்.

பாட்டாளி மக்கள் தான் இந்த "உள்ளேயிருப்பவர்கள்" ஆகும். இந்த பாட்டாளி மக்கள் கொண்ட "உள்ளக சக்தி" மட்டுமே சர்வதேச முதலாளித்துவத்தை நேரடியாக எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. "வெளியேயிருக்கும்" சக்திகளால் நடத்தப்படும் பல்வகையான கிளர்ச்சி வீணடிக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் இடம் பெற்றுவரும் சிங்கள - தமிழ் இளைஞர்களுக்கிடையிலான மோதல்கள் ஒரு உதாரணம் மட்டுமே. இப்படியாக புரட்சிகர சக்தி வீணடிக்கப்படுவதை நிறுத்தி, அதனை சர்வதேச முதலாளித்துவத்துக்கெதிராக முடுக்கி விடுவதற்கு தொழிலாளி வர்க்கத்தால் மட்டுமே முடியும். ■

இச் செய்தித்தாள் கொழும்பு 2. கியு ரோட் 143/3ஆம் இலக்கத்தில் வதியும் திருநாவுக்கரசு என்பவரால், வெலோன் பெசேஸ் ஒஸ்வின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்